தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காற்றழுத்த தாழி: தென் தமிழகத்தில் நாளை முதல் மழை பெய்யும்

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழி உருவாகியிருப்பதால் தென் தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை (ஜனவரி 14) முதல் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு பெய்யவில்லை. இந்த நிலையில், வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழி உருவாகியிருப்பதால், தென் மாவட்டங்களில் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென்மேற்கு வங்கக் கடல் பகுதியை ஒட்டிய கடலில் காற்றழுத்த தாழி உருவாகியுள்ளது. இது இப்போது வலுவற்ற நிலையில், மேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகிறது.

அடுத்த 48 மணி நேரத்தில் வலுவடைந்து தமிழகத்தின் அருகில் வரும். அப்போது லட்சத்தீவுகள் மற்றும் தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை முதல் மழை பெய்யும். ஒருசில நாள்களுக்கு தொடர்ந்து மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளது.

### பால் உற்பத்தியாளர்கள் சங்க ஊழியர்களுக்கு வங்கிக் கணக்கு வசதி

பால் உற்பத்தியாளர்கள கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வங்கிக் கணக்கு புத்தகம், ஏ.டி.எம். கார்டு, மற்றும் இன்சூரன்ஸ் பத்திரம் வழங்கும் விழா நடைபெற்றது.

ராஜபாளையம் ஆர் 56 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த இந்த விழாவுக்கு இச் சங்கத் தலைவர் எம்.பி. முருகையாபாண்டியன் தலைமை வகித்தார். இச்சங்க ஊழியர்களுக்கு ராஜபாளையம் ஸ்டேட் வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்கப்பட்ட பாஸ் புத்தகம்,

ஏ.டி.எம். கார்டு மற்றும் இன்சூரன்ஸ் பத்திரம் ஆகியவற்றை வழங்கி முருகையா பாண்டியன் பேசியதாவது:

இச் சங்கத்தகில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சிரமமின்றி ஊதியம் கிடைக்க இந்த முறை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் ஊழியர்களுக்கு விபத்து காப்பீடு பிரிமியத் தொகை ரூ. 200 ஆண்டுதோறும் சங்கம் மூலம் செலுத்தப்படுகிறது. இதன் மூலம் விபத்து காப்பீட்டுத்தொகை ரூ. 4 லட்சம் கிடைக்கும் என்றார்.

ராஜபாளையம் ஸ்டேட் பாங்க் மேலாளர்கள் அல்லிராஜ், பி.முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று சங்க ஊழியர்கள் 54 பேருக்கு சேமிப்பு கணக்கு பாஸ் புத்தகத்தை வழங்கினார்கள்.

**"வேளாண் திட்டங்களைச் செயல்படுத்தினால் 4 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும்'**

வேளாண்மைத் திட்டங்களை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம் 4 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற புதிய பயிர் ரகங்கள் வெளியீட்டு விழா மற்றும் மாநில அளவிலான உழவர்தின விழாவில் அவர் பேசியது:

தற்போதைய காலகட்டத்தில் வேளாண்மைத் துறை பல்வேறு இடையூறுகளைச் சந்தித்து வருகிறது. காலநிலை, பருவநிலை மாற்றங்கள் மற்றும் உலகளாவிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் ஆகியவை மிகப் பெரிய சவாலாக உள்ளன.

தற்போது மொத்த வேளாண்மை நிலப்பரப்பில் 91 சதவிகிதம் குறு மற்றும் சிறு நில விவசாயிகளிடம் உள்ளது. மாறிவரும் நிலப் பயன்பாட்டு முறை, பெருகிவரும் மக்கள் தொகை, நகரமயமாதல் மற்றும் அதிகரிக்கும் தொழில்வளம் காரணமாக வேளாண் உற்பத்திக்கான நிலப்பரப்பு குறைந்துகொண்டே வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக நிகர மற்றும் மொத்தச் சாகுபடி நிலப்பரப்பானது குறைந்து வருகிறது. 1990-ல் 56.32 லட்சம் ஹெக்டேராக இருந்த

மொத்த பயிர்ச் சாகுபடி பரப்பு, 2011-12-ஆண்டில் 49.54 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

இதுதவிர, பயிரிடப்படும் தரிசுநிலத்தின் பரப்பும் கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. 1990-ஆம் ஆண்டில் 10.93 லட்சம் ஹெக்டேராக இருந்த தரிசு நிலப் பரப்பானது, 2011-12ஆம் ஆண்டில் 15.94 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

விதை, உரம் மற்றும் நீர்த் தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மாநில அளவில் உற்பத்தியை அதிகரித்துள்ள போதிலும், பல்வேறு பகுதிகளில் பயிர்கள் மற்றும் விவசாயிகளிடையே வேளாண் வளர்ச்சியில் வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

மாநிலத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 52 சதவிகிதம் புன்செய் வேளாண்மையின் கீழுள்ள போதிலும், வேளாண் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாகவே உள்ளது. தற்போதைய காலகட்டத்தில் உற்பத்தித் திறனை அதிகரிப்பது அவசியம் ஆகும்.

புதிய தொழில்நுட்பங்கள் வறண்ட நிலப்பகுதி மற்றும் மானாவாரிப் பயிர்களிடையே போதிய அளவில் சென்று சேராததால், மானாவாரிப் பயிர்கள் அதனுடைய முழு உற்பத்தித் திறனை எட்டவில்லை.

வேளாண் நிலப்பரப்பு குறைந்து வருவது மட்டுமல்லாது, கடந்த சில ஆண்டுகளாக மண்ணிண் வளமும் குறைந்துகொண்டே வருகிறது. உவர் மற்றும் களர்த் தன்மையால் பாதிக்கப்பட்ட நிலங்கள் 22 லட்சம் ஹெக்டேராக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நிலங்களை சீர் செய்வதன் மூலம் பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க இயலும்.

மாநிலத்தின் வேளாண் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு மண்வளம், பயிர் மற்றும் நீர் மேலாண்மை, தரமான இடுபொருள் விநியோகம், செம்மை நெல் சாகுபடி மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துதல், இயந்திரமயமாக்கல், தொழில்நுட்ப மேலாண்மை போன்ற உத்திகளைக் கையாள வேண்டும்.

வறட்சி தாங்கி வளரும் வீரிய பயிர் ரகங்கள் மற்றும் நீர் சேமிப்பு முறைகளில் நவீன முறைகளைக் கையாண்டு, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி, அவற்றைப் பிரபலப்படுத்துவது அவசரத் தேவையாக உள்ளது.

முறையற்ற பாசனநீர் விநியோகம், அதிக நிலத்தடிநீர் உபயோகம், காலநிலை மாற்றங்கள், ஓசோன் படலத்தில் ஏற்படும் மாற்றம், நிலையற்ற வானிலை, அதிக மக்கள் தொகை, விவசாயிகளின் கடன்சுமை, நிரந்தரமற்ற வேளாண் தொழிலாளர்கள், நல்ல விலையின்மை, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களின் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் வேளாண் துறையின் வளர்ச்சி குறைகிறது.

வேளாண் வளர்ச்சியானது, பயிர் மாற்று முறை, அனைத்து ரக நிலங்களையும் பசுமையாக்குதல், துல்லியப் பண்ணையம், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல், உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை பெறுவதற்கான சந்தைகளை ஏற்படுத்தல், கிராமப்புறங்களில் உள்ள விவசாயி அல்லாதோருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வசதிகளை அளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மேலே உள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் வேளாண் துறையில் 4 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எளிதாக எட்ட இயலும் என்றார்.

**பவானி ஆற்றில் தண்ணீர் திருட்டு: விவசாயிகள் சங்கம் புகார்**

பவானி ஆற்றில் தண்ணீர் திருடப்படுவதாக கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் புகார் தெரிவித்துள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் தலைவர் செ.நல்லசாமி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பவானிசாகரிலிருந்து பவானி நகரம் வரை, பவானி ஆற்றின் இருபுறமும் பல இடங்களில், குடிநீர் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அணையிலிருந்து சராசரியாக வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் ஆற்றில் விடப்படுகிறது.

குடிநீர்த் திட்டங்களுக்கு 30 கன அடி என்ற அளவில் எடுத்தாலே போதுமானது. ஆனால் 270 கன அடி கூடுதலாக திறக்கப்படுவது நடைமுறையில் உள்ளது. இவ்வாறு எடுக்கப்படும் நீர், ஆலைப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஆலைப் பயன்பாட்டிற்குப் பிறகு வெளியேறும் கழிவு நீர் சுத்திகரிப்பு இல்லாமல், நேரடியாக ஆற்றிலேயே வடிக்கப்படுகிறது. இந்த மாசுபட்ட நீரையே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்ற பெயரில் மக்களுக்கு விநியோகித்து வருவதைக் காண முடிகிறது.

குடிநீர்த் தேவை போக மீதி நீரை அனுமதியற்ற பாசனங்கள் பயன்படுத்துவதைப் பரவலாகக் காணலாம். இவ்வாறான விதிமீறல்களையும், முறைகேடுகளையும், ஒழுங்கீனங்களையும் களைய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்கும் மற்ற ஊர்களுக்கும் எடுக்கப்படும் குடிநீரின் அளவு 60 டி.எம்.சி ஆகும். இந்த நடைமுறைச் சிக்கனம், கீழ்பவானி அணை நீர் நிர்வாகத்திலும் பின்பற்றப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

பவானிசாகர் அணையிலிருந்து கீழே ஆற்றின் கரையில், பவானி நகரம் வரை நிலத்தடிக் குழாய் பதிக்கப்பட வேண்டும். பவானி ஆற்றிலிருந்து குடிநீர் எடுத்துக் கொண்டிருக்கும் குழாய்களை இதில் இணைக்க வேண்டும்.

அணை உயரமான இடத்தில் இருப்பதால், நீரேற்றுவதற்குப் பம்ப்செட்டோ, மின்சாரமோ தேவையில்லை. தங்குதடை இல்லாமல், சுத்தமான குடிநீரைத் தொடர்ந்து மக்களுக்கு வழங்கிட முடியும். இந்த விநியோகம் சிக்கனமாகவும் இருக்கும். இதனால் தற்போது இருந்துவரும் ஒழுங்கீனங்கள் களையப்படும். சுமார் 5 டி.எம்.சி அளவுத் தண்ணீரைச் சேமித்து, கீழ்பவானிப் பாசனத் தேவைக்குக் கொடுக்க முடியும். ஊறப் போடாமல், ஆறப் போடாமல், ஒத்திப் போடாமல் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசும், பொதுப்பணித்துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### கோபியில் கால்நடை சந்தை திறப்பு

கோபியில் கால்நடை சந்தைகள் சனிக்கிழமை திறக்கப்பட்டன.

கோமாரி நோயால் கோபி அந்தியூர், மொடச்சூர், புஞ்சைபுளியம்பட்டி ஆகிய இடங்களில் இயங்கிய கால்நடை சந்தைகள் மூடப்பட்டன. தற்போது கால்நடை சந்தை திறக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தைக்கு கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு உரிய முறையில் பாதுகாப்பு செய்யப்பட வேண்டும் என கால்நடைத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கால்நடைகள் சந்தைக்கு உள்வரும் வழி, வெளியேறும் வழி மற்றும் கால்நடை ஒன்று சேரும் இடங்களில் போதுமான அளவு பிளீச்சிங் பவுடர் தெளிக்க வேண்டும். கால்நடைகளை ஏற்றிவரும் வாகனத்தின் சக்கரங்கள் இரண்டு முறை நனையும் அளவுக்கு, சோடியம் ஹைட்ராக்ஸ்டு, சலவை சோடா ஊற்றப்பட வேண்டும். சந்தை கூடுவதற்கு ஒரு நாள் முன் மற்றும் சந்தை கூடும் அன்று, சந்தை நடைபெறும் இடம் முழுவதும், நான்கு சதவீதம் சோடியம் ஹைட்ராக்ஸ்டு கரைசல் தெளிக்க வேண்டும். மொடச்சூர் சந்தையில் சனிக்கிழமை திறக்கப்பட்டது. இந்தச் சந்தைக்கு கால்நடை வரத்து குறைவாக இருந்தது. மிகவும் குறைந்த விலையில் கேட்பதால், சந்தைக்கு மாடுகளை கொண்டு வரவில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர். கால்நடை மருத்துவர்கள் முகாமிட்டு கால்நடைகளுக்கு பரிசோதனை செய்தனர்.

### பனிப்பொழிவால் வரத்து குறைவு: மல்லிகைப்பூ விலை கிலோ ரூ.1,600

சத்தி பகுதியில் நிலவும் கடும் பனிப்பொழிவால் மல்லிகைப்பூ மகசூல் பாதிக்கப்பட்டதால், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து, ஞாயிற்றுக்கிழமை கிலோ ரூ.1600 ஆக விற்பனை செய்யப்பட்டது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள சிக்கரசம்பாளையம், புதுகுய்யனூர், வடவள்ளி, பவானிசாகர், தாண்டாம்பாளையம், கெஞ்சனூர் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மல்லி, முல்லைப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தினமும் 25 டன் பூக்கள் வரத்து இருந்த நிலையில், தற்போது நிலவும் கடும்பனிப்பொழிவு காரணமாக, பூக்களின் வரத்து ஒரு டன்னாக

குறைந்தது. அதே நேரத்தில் பூக்களின் விலையும் கிடுகிடுவென உயர்ந்து கிலோ மல்லிகைப்பூ ரூ.1,600-க்கு விற்கப்பட்டது. மார்கழி மாத துவக்கத்தில் இருந்து பூக்களின் விலையும் சரிந்து மல்லிகைப்பூ கிலோ ரூ.300-க்கும், முல்லை கிலோ ரூ.400 வரை விற்கப்பட்டதால், பூ விற்பனையில் மந்தநிலை ஏற்பட்டது. உற்பத்திக் குறைவு அதே நேரத்தில் குறைவான விலை காரணமாக பூ விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந் நிலையில், ஞாயிற்றுக்கிழமை முதல் கேரளாவில் சுபமுகூர்த்தங்கள் தொடர்ந்து நடைபெற உள்ளதால், பூக்களின் தேவையும் அதிகரித்துள்ளது. இதனால் கேரள வியாபாரிகள் சத்தி பூ மார்க்கெட்டில் முகாமிட்டு பூக்களை கொள்முதல் செய்தனர். வியாபாரிகளிடையே நிலவிய போட்டி காரணமாக மல்லிகை கிலோ ரூ.1600 ஆக உயர்ந்தது.

இதுகுறித்து தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியாளர் தலைமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.ஆர்.முத்துச்சாமி, செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சனிக்கிழமை கூறியது: கடும் பனிப்பொழிவால் பூக்களின் உற்பத்தி 90 சதவீதம் குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகை காரணமாக அனைத்து பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது. முல்லை கிலோ ரூ.1000-க்கும் ரோஸ் கட்டு ஒன்றுக்கு ரூ.70-க்கும், செவ்வந்தி கிலோ ரூ.80-க்கும் விற்கப்பட்டது என்றனர்.

**வாழைத்தார்கள் விலை உயர்வு**

பொங்கல் பண்டிகையையொட்டி, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்கள் விலை உயர்ந்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பரமத்தி வேலூர் காவிரி கரையோர பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் வாழைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இங்கு விளையும் வாழைகள் பரமத்தி வேலூரில் நடைபெறும் வாழைத்தார் விற்பனை மையத்திலும், வெங்கமேடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கம் மூலமும் ஏலம் விடப்படுகின்றன.

வாழைத்தார் ஏலச் சந்தைக்கு பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து பூவன், ரஸ்தாலி, மொந்தன், செவ்வாழை, கற்பூரவள்ளி, பச்சைலாடன் ஆகிய வாழைத்தார்கள் வந்திருந்தன. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.300-க்கும், ரஸ்தாலி ரூ.250-க்கும், மொந்தன் (100 காய் கொண்டது) ரூ.600-க்கும், கற்பூரவள்ளி ரூ.250-க்கும், பச்சைலாடன் வாழைத்தார் ரூ.250-க்கும் ஏலம் போயின. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.600-க்கும், ரஸ்தாலி ரூ.300-க்கும், மொந்தன் (100 காய்கள் கொண்ட தார்) ரூ.800-க்கும், கற்பூரவள்ளி ரூ.300-க்கும், பச்சைலாடன் ரூ.350-க்கும் ஏலம் போயின. பொங்கல் பண்டிகை, தைப்பூசத்தையொட்டி வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள், வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பால் உற்பத்தியாளர்கள் கருப்பு பொங்கல் போராட்டம் ரத்து

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு 3 வாரத்துக்கான பால் நிலுவைத் தொகை வழங்கப்பட்டதை அடுத்து, அறிவிக்கப்பட்ட கருப்பு பொங்கல் போராட்டம் ரத்து செய்யப்படுவதாக தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ராமகவுண்டர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு பால் நிலுவைத் தொகையான ரூ.12 கோடியை வழங்காவிட்டால், தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் முன் தைப் பொங்கல் அன்று கருப்பு பொங்கல் போராட்டம் நடத்தப்படும் என, அறிவித்தோம். இந்த நிலையில், கிருஷ்ணகிரியில் செயல்படும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையில் உள்ள 3 வாரத்துக்கானப் பால் தொகை ரூ.2.25 கோடியை மட்டும் ஞாயிற்றுக்கிழமை பட்டுவாடா செய்தது. அறிவிக்கப்பட்ட கருப்புப் பொங்கல் போராட்டத்தை ரத்து செய்வதாகத் தெரிவித்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உப்பலமடுகு கால்வாய் பணி நிறைவு : தமிழகத்தை அடைந்தது கிருஷ்ணா நீர்

ஊத்துக்கோட்டை: ஆந்திர மாநிலம், உப்பலமடுகு கால்வாய், 6.5 கோடி ரூபாயில் சீரமைக்கப்பட்டு, அதன் வழியே திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நீர், நேற்று, தமிழகத்தை வந்தடைந்தது. சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, தமிழக -ஆந்திர அரசுகள் இடையே, கடந்த, 1983ம் ஆண்டு, கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் போடப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு ஆண்டும், 3 டி.எம்.சி., சேதாரம் போக, ஜூலை- டிசம்பர் மாதங்களில், 8 டி.எம்.சி., ஜனவரி -ஏப்ரல் மாதங்களில், 4 டி.எம்.சி., கிருஷ்ணா நீர் தர வேண்டும். இதற்காக, கண்டலேறு அணையில் இருந்து, 152 கி.மீ., துாரம், தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோபாயின்ட் வரை, கால்வாய் அமைக்கும் பணி துவங்கி, 13 ஆண்டுகள் நடந்தது. பணிகள் முடிந்து, 1996ம் ஆண்டு, முதன் முறையாக தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் வந்தது. கால்வாய் சீரமைப்பு : கடந்த, 2011ம் ஆண்டு, நவம்பர் மாதம் பெய்த கன மழையால், வரதயபாளையம் நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மழை வெள்ளத்தால், உப்பலமடுகு பகுதியில் கிருஷ்ணா கால்வாய் சேதம் அடைந்தது. தற்காலிக மாற்றுப்பாதை அமைத்து, தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருந்தது. கால்வாய் சீரமைக்க, ஆந்திர அரசு, 6.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பணிகள் வேகமாக நடந்தது. பணிகள் நடந்தாலும், மாற்றுப்பாதையில் தமிழகத்திற்கு தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்நிலையில், தமிழகத்திற்கு தண்ணீர் வரும் பகுதியில் பணிகள் நடைபெற வேண்டி இருந்தது.

இதனால், கடந்த ஜூலை மாதம், 6ம் தேதி முதல், தமிழகத்திற்கு வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர், 20 நாட்களுக்கு முன் நிறுத்தப்பட்டது. கடந்த, 10ம் தேதி, கால்வாய் பணிகள் முடிந்து, தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் திறந்து விடப்பட்டது. அங்கிருந்து, 36 கி.மீ., பயணித்து, நேற்று விடியற்காலை, 4:00 மணிக்கு, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோபாயின்டை வந்தடைந்தது. கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு, 2,030 கனஅடி நீர் திறந்து விடப்பட்ட நிலையில், ஆந்திர விவசாயிகள் தங்களின் தேவைக்காக, ஆங்காங்கே தண்ணீர் எடுத்து வருகின்றனர். இதனால், தமிழகத்திற்கு வரும் தண்ணீரின் அளவு குறைவாகவே உள்ளது. நேற்று மாலை, 4:00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 15 கனஅடி வீதம், கிருஷ்ணா நீர் வருகிறது. இத்தண்ணீர், நாளை (இன்று) மாலை, பூண்டி நீர்த்தேக்கத்தை வந்தடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## மல்லிகை கிலோ ரூ.1,000

திண்டுக்கல்: திண்டுக்கல், பூ மார்க்கெட்டில், மல்லிகை பூ, நேற்று, கிலோ, 1,000 ரூபாய்க்கு விற்பனையானது. நிலக்கோட்டை, ஏ.வெள்ளோடு, செம்பட்டி, வத்தலக்குண்டு உள்ளிட்ட பகுதிகளில் விளைவிக்கப்படும் மல்லிகை பூ, திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இதனை தஞ்சாவூர், திருச்சி, கரூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். திண்டுக்கல் மார்க்கெட்டில், மல்லிகை பூ தினமும் ஒரு டன் வரை விற்பனையாகிறது. இந்நிலையில், பொங்கல் பண்டிகை மற்றும் வரத்து குறைவால், மல்லிகை நேற்று, ஒரு கிலோ, 1,000 ரூபாய்க்கு விற்பனையானது. இரு தினங்களுக்கு முன், மல்லிகை கிலோ, 400 ரூபாய்க்கு விற்பனையானது. திண்டுக்கல் வியாபாரி ஒருவர் கூறுகையில், ""500 கிலோ மல்லிகைப்பூ மட்டுமே, விற்பனைக்கு வந்தது. பொங்கல் பண்டிகையால், தேவையும் அதிகரித்துள்ளது. இதனால், விலை உயர்ந்துள்ளது,'' என்றார்.

## 'கமகம' க்கும் உளுந்து வடை வேண்டுமா: 'மதுரை உளுந்து' தயார்

மதுரை:நன்றாக பொங்கி வரும் உளுந்தம்பருப்பு, மதுரை விவசாயக் கல்லூரியின், மரபியல் மற்றும் பயிர் இனப்பெருக்கவியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, கோவை வேளாண் பல்கலையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுகுறித்து, கல்லூரி டீன் சின்னுசாமி கூறியதாவது:பேராசிரியர்கள் இப்ராஹிம், முருகன் தலைமையில் இந்த ரகம் உருவாக்கப்பட்டது. சாதாரண உளுந்து பயிரில் விதையின் எடை அதிகமாக இருக்காது. தற்போது, மதுரை விவசாயக் கல்லூரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, 'மதுரை 1' ரகம், அதிக எடை, மகசூல் தரக்கூடியது. மஞ்சள் தேமல் நோய் மற்றும் காய்ப்புழு பூச்சிகளின் தாக்குதலுக்கு, மிதமான நோய் எதிர்ப்பு சக்தியுடன் உருவாக்கப் பட்டுள்ளது. இது, 70 முதல் 75 நாட்கள் பருவம் கொண்டது. ஏக்கருக்கு, 790 கிலோ வரை விளைச்சல் கிடைக்கும்.நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சை, திருவாரூர் தவிர அனைத்து மாவட்டங்களிலும், புரட்டாசிப் பட்டத்திற்கு ஏற்றது. 'கோ 6' ரகத்தை விட 14.5 சதவீதம், 'வம்பன் 6' ரகத்தை விட 12.4 சதவீத கூடுதல் மகசூல் கிடைக்கும். குறிப்பாக, இதில் பொங்கும் தன்மை மிகுதியாக இருப்பதால் தோசை, இட்லி, வடை நன்றாக இருக்கும்; இட்லிக்கு அரைக்க, நான்கு பங்கு அரிசி, ஒரு பங்கு உளுந்துக்கு பதிலாக, ஐந்து பங்கு அரிசி சேர்க்கலாம்; ஒரு கிலோ உளுந்து அரைத்தால், 7 கிலோ அளவிற்கு, வடை மாவு கிடைக்கும். இதற்கு காரணம் அதிலுள்ள 'அராபினோஸ் (7.05 சதவீதம்), குளோபுலின் (7.05 சதவீதம்)' வேதிப்பொருட்கள் உள்ளன.
இவ்வாறு கூறினார்.
இதுவரை மதுரையின் ரகங்கள்* நெல்லில் ஐந்து ரகங்கள் * சிறிய வெங்காயம்
* பச்சை மிளகாய் * வெண்டை* கொழிஞ்சி பசுந்தாள் உரம்
* தற்போது உளுந்துபயிறு

## கரும்பு விதைப்புக்கான சாகுபடி பணி... கண்டமங்கலம் விவசாயிகள் ஆர்வம்

] கண்டமங்கலம்: கண்டமங்கலம் பகுதி விவசாயிகள் கரும்பு விதைப்புக்கான சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஒரு டன் விதைக்கரனை கரும்புகள், 2,250 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. கண்டமங்கலம் வட்டாரத்தில் உள்ள 54 கிராமங்களில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டு கண்டமங்கலம் பகுதியில் 17 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கண்டமங்கலம் வட்டாரத்தில் 23 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் புதுச்சேரி அரியூரில் உள்ள இ.ஐ.டி., பாரி தனியார் சர்க்கரை ஆலைக்கும், 22 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கும், 9 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் லிங்காரெட்டிப்பாளையம் புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் கரும்புகளை வெட்டி அனுப்பி வருகின்றனர்.இப்பகுதியில் சி.ஓ.சி-86034 மற்றும் 11101 ரக கரும்புகள் அதிகளவு சாகுபடிசெய்யப்பட்டு, அனைத்து ஆலைகளிலும் இந்தாண்டுக்கான அரவை துவங்கி <உள்ளது. தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள கரும்புகளை அறுவடை செய்து ஆலைக்கு சப்ளை செய்து வருகின்றனர்.சர்க்கரை ஆலைகள் மூலம் கரும்பு விதைக்கரனைக்கு பரிந்துரை செய்யப்படும் கரும்பு ரகங்களை, விவசாயிகள் பயிரிட்டு 6 மாதங்களில் விதைக் கரனைகளாக வெட்டி விற்பனை செய்து வருகின்றனர்.கரும்பு நடவுக்கு சோலையுடன் வெட்டப்படும் கரும்புகள் கத்தைகளாக கட்டப்பட்டு, டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் கொண்டு செல்லப்படுகிறது. இதனை கம்ப்யூட்டர் எடை மேடையில், எடையை அளவிட்டு விற்பனை செய்யப்படுகிறது.விதைக்கரனைக்கு வெட்டப்படும் ஒரு டன் கரும்பு, 2,250 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. விதைக் கரனைக்கு வெட்டி அனுப்பப்படுகின்ற கரும்புகளில், டன் ஒன்றுக்கு 10 சதவீதம் (ஒரு டன்னுக்கு 100 கிலோ) கழிவு செய்யப்படுகிறது.ஒரு ஏக்கருக்கு (சோலையுடன் கூடிய) 4 டன் கரும்பு அல்லது 2 பருவுள்ள 30 ஆயிரம் விதைக் கரனைகள் தேவைப்படுகிறது. விதை கரனைக்கு தொடர்ந்து தேவை இருப்பதால் கண்டமங்கலம் பகுதி விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

## விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு விருதையில் 20ம் தேதி துவங்குகிறது

விருத்தாசலம்:விருத்தாசலம் பகுதி விவசாயிகளுக்கு, மானாவாரி வேளாண்மையில் மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள் தேர்வு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி வகுப்புகள் 20ம் தேதி துவங்குகிறது.

கம்மாபுரம், விருத்தாசலம், நல்லூர், மங்களூர் வட்டாரப் பகுதி விவசாயிகளுக்கான மானாவாரி வேளாண்மையில், மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள் தேர்வு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி வகுப்புகள் விருத்தாசலம், பூதாமூர் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்துறை) அலுவலகத்தில் வரும் 20ம் தேதி துவங்கி, 30ம் தேதி வரை நடக்கிறது.

பயிற்சியில் சிறு, குறு விவசாயிகள் (ஆண், பெண்), விவசாயம் செய்யும் இளைஞர்கள் பங்கேற்கலாம். அவர்கள் சொந்தமாக இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் வைத்திருக்க வேண்டும். 18 முதல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் பூதாமூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் முன்பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் முன்பதிவு செய்பவர்களுக்கே முன்னுரிமை.

இத்தகவலை விருத்தாசலம் வேளாண்மை பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் (பொறுப்பு) குணசேகரன் தெரிவித்துள்ளார்.

## எள் பயிர் செய்ய அறிவுரை

காஞ்சிபுரம்:தைப் பட்டத்தில் எள் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள், விதைகளை பரிசோதனை செய்து விதைக்கலாம் என, விதை பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.

மார்கழி மற்றும் தைப்பட்டத்தில், எள் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள், டிஎம்வி3, டிஎம்வி6, டிஎம்வி7, விஆர்ஐ(எஸ்வி)2 மற்றும் வெள்ளை எள் எஸ்பிஆர்1 ஆகிய ரக பயிர்களை விதைக்கலாம். விதையில், பொதுவாக 80 சதவீதம் முளைப்புத் திறன் இருக்க வேண்டும்.

"முளைப்பு திறனை அறிந்து எள் விதையை தேர்ந்தெடுப்பது, அதிக மகசூல் அளிக்கும். எனவே, விதைக்கும் முன்பு 100 கிராம் எள்ளை, விதைப் பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்து, அதன் தன்மையை தெரிந்து  கொள்ளலாம். 30 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும்," என விதைப் பரிசோதனை அலுவலர் பெருமாள் தெரிவித்து உள்ளார்.

## 2.2 லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு

காஞ்சிபுரம்:வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், 2.2 லட்சம் விவசாயிகளுக்கு, 'ஒருங்கிணைந்த கையேடு' வழங்கப்பட உள்ளது என, வேளாண் துறை தெரிவித்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 13 வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் 1.2 ஏக்கர் பரப்பளவில், நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்களை, விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

குறிப்பாக, அரசின் மானிய திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு, 'ஒருங்கிணைந்த கையேடு' மாவட்டம் முழுவதும் வழங்கப்பட உள்ளது.

இந்த கையேட்டில், விவசாயியின் முழு விவரம், இடு பொருள், உரம், மாற்றுப் பயிர்களை செய்ய மண் பரிசோதனை முடிவுகள், அதற்கு ஏற்றவாறு, உரப்பரிந்துரை ஆகியவை இடம் பெற்றுள்ளன. வரும், 2016ம் ஆண்டு வரை பயன்படுத்தும் வகையில், இது தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது என, வேளாண் துறை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நெல்லுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள்...மகிழ்ச்சி! தைப்பொன்னி நெல் 76 கிலோவுக்கு 400 ரூபாய் உயர்வு

ஆர்.கே.பேட்டை:தைப்பொன்னி நெல்லுக்கு, கடந்த ஆண்டைவிட, கூடுதல் விலை கிடைப்பதால்
விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். 2013ல், 1,100 ரூபாய்க்கு விற்பனையான, 76 கிலோ நெல், தற்போது 1,500 ரூபாய்க்கு விலை போகிறது.
மாவட்டத்தில், 70 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில், கடந்த ஆடிப்பட்டத்தில், திருத்தணி, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய நான்கு ஒன்றியங்களில், 15 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். 37 ஆயிரம் ஹெக்டேரில், நடவு செய்யப்பட்ட பொன்னி நெல், தற்போது அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

நெல் மூட்டை ரூ.1,500

ஒரு மூட்டை (76 கிலோ) பொன்னி நெல், 1,400 முதல், 1,500 ரூபாய் வரை விலை போகிறது.
கடந்த ஆண்டு பொங்கலின் போது, இது 1,000 ரூபாய் முதல், 1,100 ரூபாய் என, இருந்தது. மூட்டை ஒன்றுக்கு, கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு, 400 ரூபாய் கூடுதலாக விலை கிடைக்கிறது. இதனால், பொன்னி நெல் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.
உள்ளூர் தைப்பொன்னி அரிசி 100 கிலோ, 3,700 முதல் 4,000 ரூபாய்க்கும், ஆரணி (களம்பூர்) ரகம், 4,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கூடுதல் சுவை

தஞ்சை மற்றும் ஆந்திர மாநிலம், பாபட்லா பொன்னியும், 4,700 ரூபாய் என்ற விலையில் விற்பனையாகிறது.
தைப்பொன்னி, சித்திரை பொன்னி என, இரண்டு பட்டங்களில் அறுவடை செய்யப்படும் ரகங்களில், தைப்பொன்னி கூடுதல் சுவையும், தரமும் கொண்டது என்பதால், மக்கள் தங்களின் ஓராண்டு தேவைக்கான அரிசியை இப்போதே வாங்கி இருப்பு வைக்க துவங்கி உள்ளனர்.

## நெல்லுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள்...மகிழ்ச்சி! தைப்பொன்னி நெல் 76 கிலோவுக்கு 400 ரூபாய் உயர்வு

ஆர்.கே.பேட்டை:தைப்பொன்னி நெல்லுக்கு, கடந்த ஆண்டைவிட, கூடுதல் விலை கிடைப்பதால்விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். 2013ல், 1,100 ரூபாய்க்கு விற்பனையான, 76 கிலோ நெல், தற்போது 1,500 ரூபாய்க்கு விலை போகிறது.

மாவட்டத்தில், 70 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில், கடந்த ஆடிப்பட்டத்தில், திருத்தணி, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய நான்கு ஒன்றியங்களில், 15 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். 37 ஆயிரம் ஹெக்டேரில், நடவு செய்யப்பட்ட பொன்னி நெல், தற்போது அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

ஒரு மூட்டை (76 கிலோ) பொன்னி நெல், 1,400 முதல், 1,500 ரூபாய் வரை விலை போகிறது. கடந்த ஆண்டு பொங்கலின் போது, இது 1,000 ரூபாய் முதல், 1,100 ரூபாய் என, இருந்தது.

மூட்டை ஒன்றுக்கு, கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு, 400 ரூபாய் கூடுதலாக விலை கிடைக்கிறது. இதனால், பொன்னி நெல் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி யில் உள்ளனர்.

உள்ளூர் தைப்பொன்னி அரிசி 100 கிலோ, 3,700 முதல் 4,000 ரூபாய்க்கும், ஆரணி (களம்பூர்) ரகம், 4,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தஞ்சை மற்றும் ஆந்திர மாநிலம், பாபட்லா பொன்னியும், 4,700 ரூபாய் என்ற விலையில் விற்பனையாகிறது.

தைப்பொன்னி, சித்திரை பொன்னி என, இரண்டு பட்டங்களில் அறுவடை செய்யப்படும் ரகங்களில், தைப்பொன்னி கூடுதல் சுவையும், தரமும் கொண்டது என்பதால், மக்கள் தங்களின் ஓராண்டு தேவைக்கான அரிசியை இப்போதே வாங்கி இருப்பு வைக்க துவங்கி உள்ளனர்.

## மாடுகளுக்குப் பொங்கல் தரக் கூடாது: கால்நடை மருத்துவர் வலியுறுத்தல்

திண்டிவனம்:மாடுகளுக்கு அரிசி சாதம், பொங்கல் உள்ளிட்ட மாவு சத்து நிறைந்த உணவு பொருட்களை தரக் கூடாது என கால்நடை டாக்டர் வலியுறுத்தினர். திண்டிவனம் அடுத்த நொளம்பூர் கிராமத்தில் மாடுகள் வளர்ப்போருக்கு சிறப்பு விழிப்புணர்வு மற்றும் நோய் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு சிகிச்சை முகாம் நடந்தது. சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர் டாக்டர் மகேஷ் தலைமை தாங்கி பேசியதாவது :

கால்நடைகளுக்கு நோய் எப்படி வந்தது என கண்டறிய வேண்டும். நோய் பாதிப்பு இருந்தால் உடனடியாக கால்நடை மருத்துவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். அரிசி உணவு, சப்பாத்தி உள்ளிட்ட மாவு பொருட்களை அதிகமாக கொடுக்க கூடாது. இதனால் அமில நோய் பாதிப்பால் வயிறு வீங்கி மாடு கள் இறக்க நேரிடும். வேறு காரணங் களால் மாடுகள் இறந்தால் கூட மருத் துவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் மகேஷ் பேசினார்.

விழுப்புரம் ஆராய்ச்சி மைய பல்கலைக்கழக பேராசிரிய டாக்டர்கள் வெங்கடபதி, கண்ணன், பழனிவேலு முன்னிலை வகித்தனர். உதவி இயக்குனர் குருவையா, விழுப்புரம் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மகேந்திரன் விளக்க உரையாற்றினர். கால்நடைத்துறை டாக்டர்கள் செல்வராஜ், மணிகண்டன், ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புகையில்லா போகி கொண்டாட கலெக்டர் சம்பத் வேண்டுகோள்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் புகையில்லாத போகி பண்டிகையை மக்கள் கொண்டாட வேண்டுமென கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு :

பொங்கல் பண்டிகைக்கு முதள் நாளான இன்று (13ம் தேதி) போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் பழைய பொருட்களை மக்கள் எரிப்பது வழக்கம். கிழிந்த பாய்கள், பழைய துணிகள், தேவையற்ற விவசாய கழிவுகளை

தீயிட்டு கொளுத்துவர். நமது கிராமங்களில் கடைபிடிக்கும் இந்த பழக்கம் சுற்றுச்சூழலுக்கு பெருந்தீமையை ஏற்படுத்துகிறது. இது மட்டுமின்றி போகி அன்று நகரங்களில் செயற்கை பொருட்களை எரிக்கும் போது நச்சு புகை மூட்டம் ஏற்பட்டு, மக்களுக்கு சுவாச நோய்கள் ஏற்படுகிறது.

இது போன்ற செயல்மூலம் காற்றை மாசுபடுத்துவது குற்றமாகும். பழைய மரம், வறட்டி தவிர வேறு எதையும் எரிக்க ஐகோர்ட் தடை விதித்துள்ளது. இதை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

### மஞ்சள் விளைச்சல் அமோகம்: விவசாயிகளின் மகிழ்ச்சி

ரிஷிவந்தியம்:ராயபுரம் கிராமத்தில் மஞ்சள் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பகண்டைகூட்ரோடு அடுத்த ராயபுரம் கிராமத்தில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இயற்கை மருத்துவ குணநலன்கள் கொண்ட இப்பயிருக்கு தண்ணீர் மிக அவசியம். மழை குறைவு காரணமாக அதிக இடங்களில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை. 8 மாத பயிரான மஞ்சளுக்கு மாட்டு எரு, யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., போன்ற உரங்கள் இடப்படும்.

சாகுபடி செய்த மஞ்சள் பயிருக்கு மார்க்கெட்டிங் கமிட்டியில் நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

## பாக்கு மரங்களை வெட்டி வீழ்த்தும் விவசாயிகள்; பருவமழை ஏமாற்றியதால் விளைச்சல் பாதிப்பு

ஆத்தூர்: பருவமழை இல்லாமல், பாக்கு விளைச்சலில், பாதிப்பு ஏற்பட்டதால், ஆத்தூர் பகுதி விவசாயிகள், பாக்கு மரங்களை, அடியோடு வெட்டி வீழ்த்தி வருகின்றனர்.

தமிழகத்தில், 5,456 ஹெக்டேர் பரப்பளவில், மலைப் பயிரான பாக்கு பயிரிடப்பட்டு, 10 ஆயிரத்து, 436 மெட்ரிக் டன் பாக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், சேலம், கோவை மாவட்டங்களில், 30 சதவீதமும், 15 மாவட்டங்களில், 70 சதவீதம் அளவில், பாக்கு சாகுபடி செய்யப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், நரசிங்கபுரம், பெத்தநாயக்கன்பாளையம், கடம்பூர், கெங்கவல்லி, தம்மம்பட்டி, கருமந்துறை, பாப்பநாயக்கன்பட்டி, ஏத்தாப்பூர், தும்பல், வாழப்பாடி பகுதிகளில், 3,940 ஏக்கர் நிலங்களில், பாக்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கு, உற்பத்தி செய்து, பதப்படுத்தும் பாக்குகளை, சேலம் செவ்வாய்பேட்டை சந்தை மூலம், கும்பகோணம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும், கோவையில் உற்பத்தி செய்யும் பாக்குகளை, மேட்டுப்பாளையம் சந்தை மூலம், இதர மாவட்டங்களுக்கும், விற்பனை செய்து வருகின்றனர்.

ஆத்தூர் பகுதியில் விளையும் பாக்குகளை, ஆண்டு தோறும், ஐந்து கோடி ரூபாய் வரை, கொள்முதல் செய்யப்படுகிறது. பாக்கு உற்பத்தி மூலம், 30 ஆயிரம் கூலித் தொழிலாளர்களுக்கு, வேலை கிடைக்கிறது. தமிழகம் மட்டுமின்றி, மும்பை, குஜராத், மகாராஷ்டிரா மற்றும் பாகிஸ்தானுக்கு, இடைத்தரர்கள் மூலம், பாக்கு கொள்முதல் செய்வதால், 30 சதவீதம் வரை, விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

இந்நிலையில், ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், பைத்தூர், கடம்பூர், ஏத்தாப்பூர் உள்ளிட்ட பகுதிளில், 200 ஏக்கருக்கு மேல், வறட்சியால் மரங்கள் காய்ந்தது. விளைச்சல் இல்லாமல், காய்ந்த மரங்களை, விவசாயிகள், அடியோடு வெட்டி வீழ்த்தி வருகின்றனர்.

ஆத்தூர், பைத்தூர் பகுதி பாக்கு விவசாயிகள் கூறியதாவது:

ஆத்தூர், வாழப்பாடி, கெங்கவல்லி தாலுகா பகுதிகளில், பாக்கு, வெற்றிலை

பிரதான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு, 800 பாக்கு செடிகள் நடவு செய்தால், ஐந்து ஆண்டுகளில், விளைச்சலுக்கு வரும்போது, மரத்துக்கு தலா ஐந்து கிலோ வீதம் பாக்குகள் கிடைக்கும்.

பாக்குகளை அறுவடை செய்து, பதப்படுத்தப்பட்டு, இடைத்தரர்கள் மூலம் விற்பனை செய்வதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதில்லை. எனவே, பாக்கு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும். பருவ மழை இல்லாததால், பாசன வசதியின்றி பாக்கு மரங்கள் செத்து மடிந்து வருகிறது.

சொட்டு நீர் பாசன முறையில் கூட பாக்கு மரத்தை காப்பாற்ற முடியாததால், 15 முதல், 20 வயது கொண்ட பாக்கு மரத்தை வெட்டி வீழ்த்தும் நிலை உள்ளது. வறட்சி நிவாரணம் வழங்கும்படி மனு செய்தால், அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை. இவ்வாறு கூறினர்.

@subtitle@அரசு பரிசீலித்தால் கொள்முதல் மையம்@@subtitle@@

இதுகுறித்து வேளாண்துறை அலுவலர்கள் கூறியதாவது:

பாக்கு விலை கணிசமான அளவில் இருப்பதால், ஒரு ஹெக்டேருக்கு, கொட்டை பாக்கு, 2.50 லட்சம் ரூபாய் வரையும், சுத்தம் செய்து, வெட்டி வைத்த பாக்குகளை, 5.50 லட்சம் ரூபாய் வரை, வருவாய் கிடைக்கிறது.

ஆண்டு தோறும், தமிழக அரசு, பல்வேறு விளை பயிர்களுக்கு, மட்டுமே வேளாண் செலவுகள் மற்றும் விலை குறித்த குழுவுடன் ஆதார விலையை நிர்ணயம் செய்யுமாறு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

அவ்வாறு, குறிப்பிடப்பட்ட விவசாய விளைப் பொருட்களுக்கான பட்டியலில், பாக்கு பயிர் இடம் பெறவில்லை. தமிழக அரசு பரிசீலனை செய்தால் மட்டுமே, பாக்கு கொள்முதல் மையம் அமைக்க முடியும். அவ்வாறு, கூட்டுறவு அல்லது வேளாண் சார்ந்த பாக்கு கொள்முதல் மையம் அமைத்தால், அரசுக்கு கணிசமான வருவாயும், விவசாயிகளும் பயன்பெறுவர்.

இவ்வாறு கூறினர்.

## நீலகிரி தேயிலையின் உள்நாட்டு வர்த்தகத்தில் "ஏறுமுகம்'

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில், உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில் விற்கப்படுகிறது. இந்தாண்டின், 2வது ஏலம், நடந்தது; மொத்தம் 18.42 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது.

இதில், இலை ரகம் 12.79 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.63 லட்சம் கிலோ அடங்கும்.பாகிஸ்தான், எகிப்து, ரஷ்யா உட்பட வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாக இருந்தாலும், கர்நாடக, ஆந்திரா, குஜராத் உட்பட உள்நாட்டு வர்த்தகர்கள் கை கொடுத்தனர்.

இதனால், விற்பனைக்கு வந்த தேயிலை தூளில், 88 சதவீதம் விற்று தீர்ந்தது; விற்கப்பட்ட தேயிலை தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் அதிகரித்தது. இதில், சி.டி.சி., ரகத்தில் அதிகபட்சம் 205 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் 252 ரூபாய்க்கு விலை போனது.

## தொய்வு! விளைச்சலின்றி பொங்கல் விழாவில் விரக்தியில் சிவகங்கை விவசாயிகள்

காரைக்குடி:களம் காணவேண்டிய, நெற்பயிர்கள், கதிர் பிடிக்கும் நேரத்தில் கருகியதால், அறுவடையை எதிர்நோக்கிய சிவகங்கை,விவசாயிகள் விரக்தியின் உச்சியில் உள்ளனர். இதனால், கிராமங்களில், பொங்கல் பண்டிகை களையிழந்து காணப்படுகிறது.

முன் எப்போதும் இல்லாத அளவு, சிவகங்கை மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை பொய்த்து, வறட்சி ஏற்பட்டுள்ளது. கிடைத்த மழையில் நெல்லை விதைத்த விவசாயிகள், அடை மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

அக்னியாய் வெயில் மட்டுமே, வெளுத்து வாங்கியது. விண்ணை பார்க்க வேண்டிய விதைகள் மண்ணிலேயே மடிந்து, மட்கி உரமாகியது. ஓடிச்சென்ற மழை, ஒரு சில இடங்களில் லேசாக தலை

காட்டியது.

ஏக்கருக்கு 40 மூடை இல்லாவிட்டாலும், 4 மூடையாவது, சாப்பாட்டுக்கு எடுத்து விடலாம், என எண்ணியிருந்த விவசாயிகள், அடுத்தடுத்த கால சூழ்நிலையாய்,

நிலங்களை காய விடும் நிலைக்கு தள்ளப்பட்டனர். குட்டையில் தேங்கினால், மோட்டார் வைத்து தண்ணீரை கொண்டு சென்று விடலாம் என எண்ணியவர்களுக்கும் ஏமாற்றம் தான் ஏற்பட்டது.

விதைக்காகவும், உரத்துக்காகவும் வாங்கிய கடனை, அறுவடையில், அடைத்துவிடலாம் என எண்ணியவர்கள், விளையாத நெற்பயிர் மூலம் எப்படி அடைப்பது, என மன உளைச்சலுக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

நகர் பகுதிகளை விட, கிராமப்புறங்களிலேயே தைப் பொங்கல் களைகட்டும். ஆனால், விவசாயம் இன்றி, இந்த ஆண்டு கிராமங்களில் பொங்கல் விசேஷங்கள் குறைவாகவே காணப்படுகிறது.

காரைக்குடி அருகே நென்மேனி விவசாயி தனபால் கூறுகையில்,"" கிராமங்களின் விசேஷம் பொங்கல்தான். விளைச்சல் இன்றி, விவசாயிகள் பல்வேறு சிரமத்தில் உள்ளனர். வழக்கமாக ஊரில் கிராம மக்கள் கூடி, கிராம பொங்கல் வைப்பர். இந்த ஆண்டு, சாக்கோட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட பல கிராமங்ளில், இந்த பொங்கல் வைக்க முடியாத நிலை உள்ளது. களையிழந்த நிலையிலேயே பொங்கல் பண்டிகை இருக்கும்," என்றார்.

## பொன்னி நெல்லுக்கு குறைந்த விலை : காவிரி கரையோர விவசாயிகள் விரக்தி

நடப்பாண்டு, பொன்னி நெல் கொள்முதல் விலை எதிர்பார்த்த அளவு உயராததால், காவிரி கரையோர விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். மேட்டூர் அருகே, காவிரி கரையோரப் பகுதியில், 2,000 ஏக்கரில் விவசாயிகள் பொன்னி நெல் சாகுபடி செய்துள்ளனர். கால்வாய் பாசன பகுதியில், நெல் அறுவடை நடந்து வருகிறது. கடந்த ஆண்டு, 65 கிலோ கொண்ட, ஒரு மூட்டை பொன்னியை, 900 முதல், 1,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்த வியாபாரிகள், தற்போது, ஒரு மூட்டை, 1,100 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டை விட, நெல் கொள்முதல் விலை, 100 ரூபாய் மட்டுமே அதிகரித்துள்ளதால், விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது:ஒரு ஏக்கரில், 65 கிலோ கொண்ட, 25 மூட்டை நெல் அறுவடையாக வேண்டும். ஆனால், ஏக்கரில், 20 மூட்டை நெல் மட்டுமே கிடைத்துள்ளது. இதனால், ஏக்கருக்கு, 5,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தவிர, கடந்த ஆண்டு, ஆள் கூலி, 300 ரூபாயாக இருந்தது, தற்போது, 350 ரூபாயாகி உயர்ந்து உள்ளது. பொன்னி நெல் கொள்முதல் விலை எதிர்பார்த்த அளவு உயராத தால், நஷ்டம் அதிகரித்து உள்ளது.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## வடமாவட்டங்களில் கடும்பனியால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஜெய்ப்பூர்:ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் கடும்பனி பொழிவால் கடுமையாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.பனி மூட்டம் காரணமாக 6 பயணிகள் ரயில்கள் 7 மணி நேரம் தாமதமாக இயக்கப்பட்டன என்று வடமேற்கு ரயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்தார்.மேலும் ஜெய்ப்பூரில் 5.6 டிகிரியும், ஸ்ரீகங்காநகரில் 3.3 டிகிரியும், உதய்பூரில் 5.5 டிகிரி செல்சியஸ் தட்பவெப்பநிலை நிலவியது என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பால் உற்பத்தியாளர்களின் கறுப்பு பொங்கல் அறிவிப்பால் நிலுவை தொகை பட்டுவாடா**



கிருஷ்ணகிரி : நிலுவை தொகை தராவிட்டால் கறுப்பு பொங்கல் போராட்டம் நடத்தப்படும் என்று பால் உற்பத்தியாளர்கள் அறிவித்திருந்தனர். இதையடுத்து, கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள 585 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம், தினமும் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆவின் ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. இங்கு கொள்முதல் செய்யப்படும் பால், சென்னை உள்பட தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகிறது. இந்நிலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் ஒன்றியம் ரூ.12 கோடி நிலுவை தொகை வழங்க வேண்டி இருந்தது.

இதை வழங்காவிட்டால், தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பொங்கல் தினத்தன்று கிருஷ்ணகிரி ஆவின் கூட்டுறவு ஒன்றிய தலைமை அலுவலக நுழைவு வாயில் முன் கறுப்பு பொங்கல் போராட்டம் நடத்தப்படும் என பால் உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.இதையடுத்து தமிழக அரசு பால்

உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு 3 வார நிலுவை தொகை ரூ.4 கோடியே 75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து சங்க மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் கூறுகையில், தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு 8 வார நிலுவை தொகையில், 3 வார நிலுவை தொகை மட்டுமே வழங்கியுள்ளது. மேலும், மீதியுள்ள தொகை யும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும். எங்கள் கோரிக்கைகளை ஏற்று, நிலுவை தொகை வழங்கியதை தொடர்ந்து கறுப்பு பொங்கல் போராட்டம் வாபஸ் பெறப்படுகிறது' என்றார்.

கோடையில் பால் உற்பத்தி குறைவதை தடுக்க

**மானிய விலையில் வைக்கோல் தமிழக அரசு புதிய திட்டம்**

வேலூர் : கால்நடைகளுக்கு வைக்கோலை மானிய விலையில் கிலோ ரூ.2க்கு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரைவில் அமல்படுத்தப்பட உள்ளது.தமிழகத்தில் பருவமழை பற்றாக்குறை, மேய்ச்சல் நிலம் ஆக்கிரமிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாடுகளுக்கு போதிய தீவனம் கிடைப்பதில்லை. எனவே, கால்நடை வளர்ப்போர் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால், பால் உற்பத்தி பெருக்கம் அதிக அளவில் எதிர்காலத்தில் பாதிக்கப்படும் என அஞ்சப்படுகிறது.இதை சமாளிக்க கால்நடை வளர்ப்போருக்கு உலர் தீவனம் வழங்க தமிழக அரசு திட்டமிட்டு மாநிலம் முழுவதும் மானிய விலையில் ஒரு கிலோ வைக்கோல் ரூ.2க்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழகம் முழுவதும் சுமார் 125 கால்நடை தீவன கிடங்கு அமைக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தீவன கிடங்குகளிலும் வைக்கோல் கொள்முதல் செய்து இருப்பு வைக்க ரூ.10 லட்சம் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதேபோல் ஒரு மாட்டுக்கு

தினமும் 3 கிலோ வீதம் ஒரு வாரத்துக்கு சேர்த்து 21 கிலோ வைக்கோல் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு நபருக்கு 5 மாடுகள் வரை மானிய விலையில் வைக்கோல் வழங்கப்பட உள்ளது. வைக்கோல் மானிய விலையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போருக்கு நேரடியாக கிடங்குகளில் வாங்கிக்கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இதுகுறித்து வேலூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:இத்திட்டத்தை கண்காணிக்க கலெக்டர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக கால்நடை வளர்ப்போருக்கு ரேஷன் கார்டு அடிப்படையில் தீவன அடையாள அட்டைகள் வழங்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தின் மூலம் கோடை, வறட்சி காலத்தில் பால் உற்பத்தி பாதிக்காமல் இருக்க இத்திட்டம் விரைவில் அமல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 58 அடியானது**



மேட்டூர் : மேட்டூர் அணை நீர்மட்டம் 58 அடியாக உள்ளது.காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து கடந்த சில வாரங்களாகவே 500 கனஅடிக்கும் குறைவாக உள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 479 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 58.03 அடியாகவும், நீர் இருப்பு 23.34 டிஎம்சியாகவும் உள்ளது.

**கருமேனியாறு - நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்துக்கு நில ஆர்ஜிதம் தீவிரம்**




சென்னை : கருமேனியாறு-நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டு வரும் கால்வாய் பணிகளுக்காக நிலத்தை கையகப்படுத்த பொதுப்பணித்துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. நெல்லை மாவட்டம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை சாத்தான் குளம், திசையன்விளை போன்ற வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக கடந்த 2007ல் திமுக ஆட்சிக்காலத்தில் தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டம் தீட்டப்பட்டது. இதற்காக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கன்னடியன் அணைக்கட்டில் இருந்து, 6.50 கி.மீ வரை கால்வாயின் தண்ணீர் கடத்தும் திறனை அதிகப்படுத்தியும், அங்கிருந்து எம்பால் தேரி வரை 73 கி.மீ நீளத்திற்கு புதிதாக வெள்ளநீரை எடுத்து செல்லும் விதமாக கால்வாய் ஒன்றை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக கருமேனியாறு-நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டத்தினை மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன திட்டத்தின் கீழ் நிதியுதவியை எதிர்நோக்கி ரூ.369 கோடி மதிப்பீட்டில் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தினை ஒரு நிலைக்கு நான்கு பகுதிகள் வீதம் நான்கு நிலைகளாக பிரிக்கப்பட்டு மொத்தம் 72 பகுதிகளாக பணிகளை முடிக்க அனுமதியளிக்கப்பட்டது.இத்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் 36 சிப்பங்களிலும் பணிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இந்நிலையில் கடந்த 2011ல் மூன்றாம் மற்றும் நான்காம் நிலைகளை தொடங்க அரசு முடிவு செய்தது. அதன் படி இத்திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் நிலைகளுக்கான நிலம் கையகப்படுத் தும் பணிகளை தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது.

இது குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு சேர்ந்து இத்திட்டத்தினை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளுக்கான பணிகள் நடந்து வரும் போது, மூன்றாம் மற்றும் நான்காம் நிலைகள் பணிகளை மேற்கொள்ள கூடாது. ஆனால் இந்த திட்டத்தின் பயன்கருதி இதற்கான நிலத்தை கையகப்படுத்தும் பணி மேற்கொள்ள அரசு பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த திட்ட பணிகள் முழுவதுமாக இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்' என்றார்.

**ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட்டுக்கு கிருஷ்ணாநீர் வந்தது**



சென்னை : ஆந்திர, தமிழக நதிநீர் ஒப்பந்தம் தெலுங்கு-கங்கை திட்டப்படி கண்டலேறு அணையில் இருந்து சென்னை குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், 2011ல் வரதபாளையம் அருகே உப்பளமடுகு பகுதியில் கால்வாய் உடைந்ததால் ரூ.50 லட்சம் செலவில் இணை கால்வாய் அமைக்கப்பட்டு தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்தாண்டு மார்ச் மாதம் உப்பளமடுகு பகுதியில் ணீ6.5 கோடியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டது.

இந்த புதிய கால்வாய் வழியாக கடந்த 10ம்தேதி கண்டலேறு அணையில் இருந்து விநாடிக்கு 2,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர், தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட்டுக்கு நேற்று அதிகாலை 4 மணிக்கு  வந்து சேர்ந்தது. தற்போது விநாடிக்கு 15 கன அடியாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இது படிப்படியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று காலை பூண்டி ஏரியை அடையும்.

**வெளிநாட்டு பறவைகளை காண தொலைநோக்கி அமைப்பு**



சென்னை : வேடந்தாங்கலில் 30 ஹெக்டர் பரப்பளவில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. சீதோஷண நிலை காரணமாக சொந்த நாட்டைவிட்டு வெளிநாட்டு பறவைகள் வேடந்தாங்கல் வருகின்றன.சைபீரியா, ஆஸ்திரேலியா, கனடா, மியான்மர், வங்கதேசம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து கிளுவை, ஊசிவால் வாத்து, நீலச்சிறகி வாத்துகள், தட்டவாயன் எனப்படும் சோவெல்லர், பச்சைக்காலி, பவளக்காலி, பட்டாணி உள்ளான் எனப்படும் உப்புக்கொத்தி உள்ளிட்ட பல்வேறு பறவைகள் அக்டோபர் முதல் மார்ச் வரை இங்கு வாழ்ந்துவிட்டு மீண்டும் சொந்த நாடுகளுக்கு சென்றுவிடுகின்றன.

இதுபோல் உள்நாட்டு பறவைகளான உண்ணிக்கொக்கு, சிறுவெண் கொக்கு, சிறிய காகம், கூழைக்கடா, மஞ்சள் மூக்கு நாரை, பாம்புத்தாரா, வெள்ளை அரிவாள் மூக்கன், குருட்டுக்கொக்கு எனப்படும் மடையான் நத்தைகுத்தி நாரை மற்றும் இனப்பெருக்க காலத்தில் முக்குளிப்பான், கொண்டை நீர் காகம் வருகின்றன. சுற்றுலா பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு ரூ.19.40 லட்சத்தில் இருக்கைகள், கழிப்பிட வசதி, குப்பை சேகரிப்பு தொட்டி, தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ளது. வனத்துறை சார்பில் ரூ.7.50 லட்சத்தில் சிமெண்ட் நடைபாதை, ரூ.2 லட்சத்தில் 20 இருக்கைகள், ரூ.4 லட்சத்தில் சுற்றுலா

பயணிகள் தங்கும் விடுதி, ரூ.4.5 லட்சத்தில் 3 இடங்களில் கழிப்பறை, ரூ.2 லட்சத்தில் 2 இடங்களில் குடிநீர் வசதி, ரூ.14 லட்சத்தில் பறவைகளின் படம் வைக்கும் அரங்கு மேம்பாடு மற்றும் விளம்பர பலகை, ரூ.1 லட்சத்தில் 4 தொலைநோக்கி, ரூ.50 ஆயிரத்தில் வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஒரு கட்டு கரும்பு ரூ.300க்கு விற்பனை**

சென்னை : சென்னை, கோயம்பேடு மார்க்கெட்டிற்கு நேற்று குறைந்த அளவிலேயே கரும்பு விற்பனைக்கு வந்ததால் ஒரு கட்டு ரூ.200 முதல் 300க்கு விற்பனை செய்யப்பட்டது.பொங்கல் திருநாளை முன்னிட்டு  பண்ருட்டி, தஞ்சை, மதுரை, தேனி, அறந்தாங்கி, பட்டுகோட்டை, சேலம் ஆகிய இடங்களில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டிற்கு நேற்று அதிகாலை சுமார் 50 லாரிகளில் மட்டுமே கரும்பு கொண்டுவரப்பட்டது. பொங்கலுக்கு இடையில் ஒரு நாளே உள்ள நிலையில் கரும்பு வரத்து மிக குறைவாக இருந்ததால் ஒரு கட்டு (20 கரும்பு) ரூ.200க்கும் விற்கப்பட்டது. சற்று திடமான கரும்பு ஒரு கட்டு ரூ.300க்கு விற்கப்பட்டது. அதே போல மஞ்சள் கொத்தும் ஈரோடு, குண்டூர் மற்றும் விஜயவாடா ஆகிய இடங்களில் இருந்து நேற்று அதிகாலை 4 மினி லாரிகளில் கொண்டு வரப்பட்டது. இரண்டு கொத்து ரூ.30க்கு விற்கப்பட்டது. இது குறித்து சில்லரை வியாபாரிகள் கூறுகையில், ‘கரும்பு லோடு குறைவாகவே வந்ததால் மொத்த விலை சற்று கூடுதலாக இருந்தது. திங்களன்று லோடு அதிகம் வரும் என்று கோயம்பேடு வியாபாரிகள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி வந்தால் எங்களுக்கு விலை சற்று குறைவாக கிடைக்கும். மார்க்கெட்டில் இருந்து கொண்டு வருதற்கான வண்டி கூலி, கரும்பு கட்டை ஏற்றி இறக்கும் கூலி ஆகியவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே நடுத்தரமான ஒரு கரும்பு கழி ரூ.30க்கும் சற்று திடமான கரும்பு கழி ரூ.40க்கும் விற்கிறோம். மஞ்சள் கொத்து குறைந்தபட்சம் ரூ.40க்கு விற்றால் தான் எங்களுக்கு கட்டுப்படியாகும்’ என்றனர்.


**பொங்கலுக்கு உயராததால் உற்பத்தியாளர்கள் ஏமாற்றம்**



கோவை: கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த பண்ணை கொள்முதல் விலை மற்றும் சில்லரை விற்பனை விலையை உற்பத்தியாளர்கள் தினமும் நிர்ணயம் செய்கின்றனர். இந்நிலையில், கடந்த மாதம் 14ம் தேதி வரை கறிக்கோழி விலை மிகவும் சரிவடைந்திருந்தது. அன்று பண்ணை கொள்முதல் விலை உயிருடன் கோழி கிலோ ரூ.58க்கும், சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி ரூ.120க்கும் விற்றது.பின்னர், கடந்த மாதம் 15ம் தேதி முதல் 30ம் தேதி வரை விலை உயர்ந்தது. கடந்த 30ம் தேதி பண்ணை கொள்முதல் விலை உயிருடன் ரூ.83 ஆகவும், சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி ரூ.170க்கும் உயர்ந்தது.

இந்நிலையில், கடந்த 2ம் தேதி முதல் கறிக்கோழி விலை சரிய தொடங்கியது. பண்ணை விலை கிலோ உயிருடன் ரூ.77 ஆகவும், சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி கிலோ ரூ.160 ஆகவும் சரிந்தது. பின்னர் கடந்த 10 நாட்களாக பண்ணை கொள்முதல் விலை ரூ.75ல் இருந்து ரூ.70க்கு சரிந்தது. இதனால் சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி கடந்த 5 நாட்களாக கிலோ ரூ.140க்கு விற்கப்படுகிறது. தொடர்ந்து 10 நாட்களாக கறிக்கோழி விலை சரிவை சந்திப்பதால், உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர். பொதுவாக பொங்கலை முன்னிட்டு விலை உயரும். ஆனால், இந்த ஆண்டு உயரவில்லை. இதனால் உற்பத்தியாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசு குறைப்பு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசு குறைத்து 330 காசாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு' கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், தற்போது நிலவும் வர்த்தக சூழ்நிலை குறித்து விவாதிக்கப்பட்டு, முட்டை விலையில் 10 காசுகள் குறைக்கப்பட்டது. தொடர்ந்து முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டை விலை சரிவு, பொங்கல் பண்டிகையையொட்டி தொடர் விரதம் வருவதால் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். முட்டைக்கோழி கிலோ ரூ.55, கறிக்கோழி கிலோ ரூ.77 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: (பைசாவில்) பெங்களூர்- 370, மைசூர்- 370, ஐதராபாத்- 370, மும்பை- 403, விஜயவாடா- 367, கொல்கத்தா- 417, பர்வாலா- 372, டெல்லி- 393 காசுகளாக உள்ளது.

**கடலை எண்ணெய், பாமாயில் விலை சரிவு**



விருதுநகர்: கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.20ம், பாமாயில் டின்னுக்கு ரூ.40ம், துவரம்பருப்பு மூட்டைக்கு ரூ.400ம் விலை சரிந்துள்ளது. பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ.300 உயர்ந்துள்ளது. நிலக்கடலை பருப்பு (80 கிலோ) மூட்டை ரூ.3,800ல் இருந்து ரூ.3,600 ஆக குறைந்துள்ளதால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ.1,320ல் இருந்து ரூ.1,300 ஆக சரிந்துள்ளது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு உயர்வால் பாமாயில் (15 கிலோ) டின் ரூ.975ல் இருந்து ரூ.935 ஆக குறைந்துள்ளது. குல்பர்காவிலிருந்து புது துவரை வரத்து அதிகரித்துள்ளது. இதனால் துவரம் பருப்பு மூட்டைக்கு ரூ.400 குறைந்துள்ளது.

குல்பர்கா புது துவரை (100 கிலோ) மூட்டை ரூ.4,300, துவரை பழசு ரூ.5,200ல் இருந்து ரூ.4,800 ஆகவும், துவரம் பருப்பு லயன் ரூ.7 ஆயிரத்தில் இருந்து ரூ.6,600 ஆகவும், துவரம் பருப்பு உடைசல் 6,400ல் இருந்து ரூ.6 ஆயிரமாகவும் குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தேவை அதிகரித்துள்ள நிலையில் வரத்து இல்லாததால் பாசிப் பருப்பு மூட்டைக்கு ரூ.300 உயர்ந்துள்ளது. பாசிப் பயறு லயன் ரூ.6,800ல் இருந்து ரூ.7,200, நாடு பாசிப்பயறு ரூ.6,100ல் இருந்து ரூ.6,500, பாசிப் பருப்பு லயன் ரூ.9 ஆயிரத்தில் இருந்து ரூ.9,400, நாடு பாசிப் பருப்பு ரூ.8,500ல் இருந்து ரூ.8,900 என விலை அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகை முடிந்ததும் பாசிப்பருப்பு விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வணிகர்கள் தெரிவித்தனர்.

**நயாகரா நீர்வீழ்ச்சி உறைந்தது குளிருக்கு 21 பேர் பலி**



அமெரிக்காவில் டிசம்பர் மாதம் தொடங்கியது முதலே கடும் குளிர் நிலவி வந்தது. இந்நிலையில் புத்தாண்டு முடிந்து சில நாட்களிலேயே குளிர் மேலும் அதிகரித்து பனிப்புயல் வீசத் தொடங்கியது. வெப்பநிலை படிப்படியாக குறைந்து உறைபனியை தொட்டது. பூஜ்யத்திற்கும் கீழே சரிந்த வெப்பநிலை அடுத்த ஓரிரு நாட்களிலேயே துருவ பிரதேசங்களான ஆர்டிக் பிரதேசங்களில் காணப்படுவதை போல மைனஸ் 45 டிகிரி வரை இறங்கியது. இதனால் அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணங்கள், கனடாவின் ஒரு பகுதி என அனைத்தும் கடுமையாக உறைபனிக்கு பாதிக்க தொடங்கின. ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் வீடுகளிலேயே இருக்கும்படி எச்சரிக்கை விடப்பட்டது. அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டும் வாகனங்களில் செல்லவும், அவ்வாறு செல்லும் வாகன ஓட்டிகள் தகுந்த பாதுகாப்புடன் பயணங்களை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.நகரங்களின் முக்கிய சாலைகள், விமான நிலையங்களின் ஓடு தளங்கள் ஆகியவற்றில் தேங்கியிருக்கும் உறைபனி இரவு பகலாக அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த உறைபனி காரணமாக வாகன விபத்துகளிலும், குளிரில் சிக்கியும் அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பகுதிகளில் இதுவரை 21 பேர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்கா, கனடாவில் உள்ள நதிகள் துருவ பிரதேசங்களில் காணப்படுவதைப் போல உறைந்தன.இந்த உறைபனி காரணமாக அமெரிக்கா மற்றும் கனடாவில் சுமார் 1 கோடியே 60 லட்சம் பேரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வீடுகளில் முடங்கியுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோயம்பேட்டில் கரும்பு, மஞ்சள், காய்கறி உள்பட பொங்கல் பொருட்கள் வரத்து அதிகரிப்பால் விலை கணிசமாக குறைந்தது**



சென்னை,

கோயம்பேட்டுக்கு கரும்பு, மஞ்சள், காய்கறிகள் உள்பட பொங்கல் பொருட்கள் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வரத்து அதிகரித்துள்ளதால், விலை கணிசமாக குறைந்தது.

பொங்கல் பண்டிகை

பொங்கல் திருநாள் நாளை (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்படுவதையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டில் கரும்பு, மஞ்சள், இஞ்சி மற்றும் காய்கறிகள் வந்து குவிந்துள்ளன. இவைகளை வாங்க ஏராளமான வியாபாரிகளும், பொதுமக்களும் திரண்டனர்.

கோயம்பேடு வியாபாரிகள் சங்க ஆலோசகர் வி.ஆர்.சவுந்தர்ராஜன் கூறியதாவது:–

கரும்பு கடந்த 3 நாட்களாக தஞ்சாவூர், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மதுரை, தேனி, பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து லாரிகளில் கொண்டுவரப்படுகிறது. 125 லாரிகளில் கரும்பு வந்துள்ளது.

மஞ்சள்–இஞ்சி

அதேபோல் ஆந்திர மாநிலம் காளஹஸ்தி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்து 7 லாரிகளில் மஞ்சள் குலைகளும் வந்துள்ளன. கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் கொடைக்கானல், பண்ணைக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து 10 லாரிகளில் இஞ்சியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

கரும்பு ஒரு கட்டு (15 கரும்புகள்) ரூ.200 முதல் ரூ.300 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் குலை ஒரு கட்டு (6 செடி) ரூ.50க்கும், இஞ்சி ஒரு கட்டு ரூ.20க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டுகளைவிட தற்போது கரும்பு, மஞ்சள், இஞ்சி வரத்து அதிகமாக இருக்கிறது.

காய்கறிகள் விலை குறைவு

காய்கறிகளின் விலையும் கடந்த ஆண்டு பொங்கல் சீசனை விட தற்போது விலை குறைந்துள்ளது. தேங்காய், முருங்கைக்காய் தவிர மற்ற அனைத்து காய்களும் விலை குறைவாகத் தான் இருக்கிறது.

வரத்து அதிகரித்ததால் விலையும் எதிர்பார்த்த அளவு உயரவில்லை. இதனால் அதிகளவில் வியாபாரிகளும், பொது மக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

பஸ்–ரெயில் நிலையங்கள்

கோயம்பேடு பஸ் நிலையத்தில் நேற்று பகலில் வெளியூர் செல்லும் பயணிகள் அதிகளவில் குவிந்தனர். இவர்களுக்காக அனைத்து ஊர்களுக்கும் செல்ல 3 ஆயிரத்திற்கும் மேல் சிறப்பு பஸ்கள் விடப்பட்டிருந்தன. பஸ் நிலையத்தில் போதுமான இடம் இல்லாததால், மார்க்கெட் சாலையிலும் பஸ்களை நிறுத்தி, பயணிகளை ஏற்றிச் சென்றனர்.

இதனால் கோயம்பேடு மற்றும் சுற்றுப்பகுதிகளில் நேற்று போக்குவரத்து நெரிசலில் பஸ், கார் உள்பட வாகனங்கள் சிக்கித் தவித்தன. எழும்பூர், சென்டிரல் மற்றும் தாம்பரம் ரெயில் நிலையங்களிலும் பயணிகளின் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது.

தியாகராய நகரில்

சென்னையை சுற்றியுள்ளவர்கள் பொங்கலுக்கு புதுத் துணிகள் வாங்கவும், பொங்கல் பொருட்கள் வாங்குவதற்கும் மின்சார ரெயில்களில் வந்ததால் அவற்றிலும் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. தியாகராயநகரில் நேற்று வழக்கத்தைவிட பெண்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்ததால் திருடர்களை கண்காணிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது.

**கோயம்பேட்டில் கரும்பு, மஞ்சள், காய்கறி உள்பட பொங்கல் பொருட்கள் வரத்து அதிகரிப்பால் விலை கணிசமாக குறைந்தது**



சென்னை, -

கோயம்பேட்டுக்கு கரும்பு, மஞ்சள், காய்கறிகள் உள்பட பொங்கல் பொருட்கள் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வரத்து அதிகரித்துள்ளதால், விலை கணிசமாக குறைந்தது.

<u>பொங்கல் பண்டிகை</u>

பொங்கல் திருநாள் நாளை (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்படுவதையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டில் கரும்பு, மஞ்சள், இஞ்சி மற்றும் காய்கறிகள் வந்து குவிந்துள்ளன. இவைகளை வாங்க ஏராளமான வியாபாரிகளும், பொது மக்களும் திரண்டனர்.

கோயம்பேடு வியாபாரிகள் சங்க ஆலோசகர் வி.ஆர்.சவுந்தர்ராஜன் கூறியதாவது:-

கரும்பு கடந்த 3 நாட்களாக தஞ்சாவூர், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மதுரை, தேனி, பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து லாரிகளில் கொண்டுவரப்படுகிறது. 125 லாரிகளில் கரும்பு வந்துள்ளது.



<u>மஞ்சள்-இஞ்சி</u>

அதேபோல் ஆந்திர மாநிலம் காளஹஸ்தி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்து 7 லாரிகளில் மஞ்சள் குலைகளும் வந்துள்ளன. கேரள மாநிலத்தின் பல்வேறு

பகுதிகள் மற்றும் கொடைக்கானல், பண்ணைக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து 10 லாரிகளில் இஞ்சியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

கரும்பு ஒரு கட்டு (15 கரும்புகள்) ரூ.200 முதல் ரூ.300 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் குலை ஒரு கட்டு (6 செடி) ரூ.50க்கும், இஞ்சி ஒரு கட்டு ரூ.20க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டுகளைவிட தற்போது கரும்பு, மஞ்சள், இஞ்சி வரத்து அதிகமாக இருக்கிறது.

<u>காய்கறிகள் விலை குறைவு</u>

காய்கறிகளின் விலையும் கடந்த ஆண்டு பொங்கல் சீசனை விட தற்போது விலை குறைந்துள்ளது. தேங்காய், முருங்கைக்காய் தவிர மற்ற அனைத்து காய்களும் விலை குறைவாகத்தான் இருக்கிறது.

வரத்து அதிகரித்ததால் விலையும் எதிர்பார்த்த அளவு உயரவில்லை. இதனால் அதிகளவில் வியாபாரிகளும், பொது மக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>பஸ்-ரெயில் நிலையங்கள்</u>

கோயம்பேடு பஸ் நிலையத்தில் நேற்று பகலில் வெளியூர் செல்லும் பயணிகள் அதிகளவில் குவிந்தனர். இவர்களுக்காக அனைத்து ஊர்களுக்கும் செல்ல 3 ஆயிரத்திற்கும் மேல் சிறப்பு பஸ்கள் விடப்பட்டிருந்தன. பஸ் நிலையத்தில் போதுமான இடம் இல்லாததால், மார்க்கெட் சாலையிலும் பஸ்களை நிறுத்தி, பயணிகளை ஏற்றிச் சென்றனர்.

இதனால் கோயம்பேடு மற்றும் சுற்றுப்பகுதிகளில் நேற்று போக்குவரத்து நெரிசலில் பஸ், கார் உள்பட வாகனங்கள் சிக்கித் தவித்தன. எழும்பூர், சென்டிரல்

மற்றும் தாம்பரம் ரெயில் நிலையங்களிலும் பயணிகளின் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது.

<u>தியாகராய நகரில்</u>

சென்னையை சுற்றியுள்ளவர்கள் பொங்கலுக்கு புதுத் துணிகள் வாங்கவும், பொங்கல் பொருட்கள் வாங்குவதற்கும் மின்சார ரெயில்களில் வந்ததால் அவற்றிலும் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. தியாகராயநகரில் நேற்று வழக்கத்தைவிட பெண்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்ததால் திருடர்களை கண்காணிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பு**



திருவள்ளூர்

கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>நதிநீர் பங்கீட்டு திட்டம்</u>

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக, ஆந்திர அரசுகள் கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தை செய்து கொண்டன. அதன்படி ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு கண்டலேறு அணையில்

இருந்து தமிழ்நாட்டுக்கு திறந்து விட வேண்டும். ஜனவரி மாதத்தில் இருந்து ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீர், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீர் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள சத்தியமூர்த்தி நீர் தேக்கத்துக்கு திறந்து விடவேண்டும்.

பூண்டி ஏரியின் மொத்த உயரம் 35 அடி. 3231 மில்லியன் கன அடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின் கீழ் கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர் மற்றும் மழை நீர் பூண்டி ஏரியில் சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல் ஏரிக்கு திறந்துவிடுவது வழக்கம்.

<u>தண்ணீர் திறப்பு</u>

ஊத்துக்கோட்டையில் இருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உப்பலமடுகு பகுதியில் கிருஷ்ணா நதி கால்வாய் மீது கட்டப்பட்ட மதகு பலத்த மழையால் அடித்து செல்லப்பட்டது. இதனால் கிருஷ்ணா நதி நீர் பூண்டிக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் ஆந்திர பொதுப்பணித்துறை அதிகாரிகள் தற்காலிகமாக கால்வாய் அமைத்து பூண்டிக்கு தண்ணீர் திறந்து விட்டனர். மேலும் பூண்டி ஏரிக்கு தங்கு தடையின்றி தண்ணீர் வந்தடைவதற்காக ரூ.6½ கோடி செலவில் நிரந்தரமான கால்வாய் அமைக்கும் பணிகள் 6 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்டு முழுவீச்சில் நடந்து முடிந்தது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணாநதி கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 500 கனஅடி வீதம் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாரைகுப்பத்துக்கும், நாளை (திங்கட்கிழமை) பூண்டி ஏரிக்கும் சென்றடைய வாய்ப்பு உள்ளது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று மதியம் 3 மணி நிலவரப்படி 17.73 அடி பதிவானது. வெறும் 96 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருப்பு உள்ளது.

**பொங்கல் பண்டிகை விற்பனைக்காக தயார் ஆகும் மஞ்சள்**



கும்மிடிப்பூண்டியை அடுத்த பாலவாக்கம் ஊராட்சிக்கு உள்பட்ட கன்னலூர் கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் அறுவடை செய்யப்பட்டு, பொங்கல் பண்டிகை விற்பனைக்காக தயார் செய்யப்படும் காட்சியை படத்தில் காணலாம்.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பு**



திருவள்ளூர்: கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>நதிநீர் பங்கீட்டு திட்டம்</u>

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக, ஆந்திர அரசுகள் கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தை செய்து கொண்டன. அதன்படி

ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு கண்டலேறு அணையில் இருந்து தமிழ்நாட்டுக்கு திறந்து விட வேண்டும். ஜனவரி மாதத்தில் இருந்து ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீர், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீர் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள சத்தியமூர்த்தி நீர் தேக்கத்துக்கு திறந்து விடவேண்டும்.

பூண்டி ஏரியின் மொத்த உயரம் 35 அடி. 3231 மில்லியன் கன அடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின் கீழ் கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர் மற்றும் மழை நீர் பூண்டி ஏரியில் சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல் ஏரிக்கு திறந்துவிடுவது வழக்கம்.

<u>தண்ணீர் திறப்பு</u>

ஊத்துக்கோட்டையில் இருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உப்பலமடுகு பகுதியில் கிருஷ்ணா நதி கால்வாய் மீது கட்டப்பட்ட மதகு பலத்த மழையால் அடித்து செல்லப்பட்டது. இதனால் கிருஷ்ணா நதி நீர் பூண்டிக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் ஆந்திர பொதுப்பணித்துறை அதிகாரிகள் தற்காலிகமாக கால்வாய் அமைத்து பூண்டிக்கு தண்ணீர் திறந்து விட்டனர். மேலும் பூண்டி ஏரிக்கு தங்கு தடையின்றி தண்ணீர் வந்தடைவதற்காக ரூ.6½ கோடி செலவில் நிரந்தரமான கால்வாய் அமைக்கும் பணிகள் 6 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்டு முழுவீச்சில் நடந்து முடிந்தது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணாநதி கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 500 கனஅடி வீதம் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாரைகுப்பத்துக்கும், நாளை (திங்கட்கிழமை) பூண்டி ஏரிக்கும் சென்றடைய வாய்ப்பு உள்ளது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று மதியம் 3 மணி நிலவரப்படி 17.73 அடி பதிவானது. வெறும் 96 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருப்பு உள்ளது.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சேலத்தில் கரும்பு, மஞ்சள் குலை, பூஜை பொருட்கள் விற்பனை படுஜோர்**



சேலம்,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சேலத்தில் மஞ்சள் குலை, கரும்பு மற்றும் பூஜை பொருட்கள் விற்பனை படுஜோராக நடந்தது.

<u>பூஜை பொருட்கள்</u>

தமிழர்களின் பாரம்பரிய விழாவான பொங்கல் பண்டிகை திருநாள் நாளை(செவ்வாய்க்கிழமை) சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் தினத்தன்று வீடுகள் தோறும் வாசலில் அதிகாலையில் பொங்கல் வைத்து சூரிய பகவானுக்கு அனைத்து வகையான காய்கறிகள், கரும்பு போன்றவை படைத்து வழிபடுவது வழக்கம்.

சேலம் மாநகரில் பொங்கல் பண்டிகையையொட்டி நேற்று கடை வீதியில் பொங்கல் வைப்பதற்கான மண்பானைகள், கரும்பு, மஞ்சள் குலை, காப்புக்கட்டு பூ போன்ற பூஜை பொருட்கள் விற்பனைக்கு குவிந்துள்ளன. கடை வீதிக்கு கூட்டாத்துப்பட்டியில் இருந்து வாகனம் மூலம் மஞ்சள் குலையை வியாபாரிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

**கரும்பு விற்பனை மும்முரம்**

இதை மக்கள் அனைவரும் வாங்கி சென்றனர். ஒரு ஜோடி மஞ்சள் குலை ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், கடை வீதி மற்றும் செவ்வாய்பேட்டை மார்க்கெட் போன்ற பகுதிகளில் ஆவாரம்பூ, பூலாம்பூ, பண்ணை பூ மற்றும் வேப்பிலை அடங்கிய காப்புக்கட்டு பூவை பொதுமக்கள் வீட்டுக்கு வாங்கி சென்றனர். ஒரு கட்டு ரூ.5 வரை விற்பனை செய்யப்பட்டது.

கரும்பு விற்பனையும் மும்முரமாக நடந்தது. சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விற்பனைக்காக சேலத்திற்கு வியாபாரிகள் கொண்டு வந்துள்ளனர். ஒரு ஜோடி கரும்பு ரூ.85–க்கும், ஒரு துண்டு கரும்பு ரூ.10 வரை விற்பனை செய்யப்பட்டது. தேங்காய், பழம் விற்பனையும் படுஜோராக நடந்தது.

**கலர், கலரான மண்பானைகள்**

சேலம் கடைவீதி மற்றும் வின்சென்ட் உள்பட பல்வேறு பகுதிகளில் கலர், கலரான பூசிய மண்பானைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் பண்டிகை அன்று பெரும்பாலானோர் மண்பானையில் பொங்கலிட்டு இறைவனுக்கு படைப்பதால் மண்பானைகள் விற்பனை செய்யும் கடைகளில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதை ஏராளமானவர்கள் வாங்கி சென்றனர். மண்பானைகள் ரூ.70 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகையையொட்டி சேலம் நகரில் உள்ள ஜவுளிக்கடைகளில் கூட்டம் அலைமோதியது.

**வ.உ.சி. பூ மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்ததால் பூக்களின் விலை 'கிடுகிடு' உயர்வு ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.1,200–க்கு விற்பனை**



சேலம்,

வ.உ.சி. பூ மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்ததால் பூக்களின் விலை 'கிடுகிடு' வென உயர்ந்து உள்ளது. ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.1,200–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>வரத்து குறைவு</u>

சேலம் பழைய பஸ் நிலையம் அருகே வ.உ.சி. பூ விற்பனை மார்க்கெட் உள்ளது. இந்த மார்க்கெட்டுக்கு தினமும் 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் பூக்கும் பூக்களை 25 டன்னுக்கு மேல் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது பனிகாலம் என்பதால் மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து மிகவும் குறைந்து உள்ளது. இதனால் 20 டன் பூக்களே கொண்டு வரப்படுகிறது. ஆகையால் சில பூக்களின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.

ரூ.1,200–க்கு விற்பனை

கடந்த வாரம் கிலோ ரூ.700 வரை விற்ற மல்லிகை பூ இந்த வாரம் ரூ.1,200 வரை விற்கப்படுகிறது. கடந்த வாரம் கிலோ ரூ.70 வரை விற்ற காக்கட்டான் பூ இந்த வாரம் ரூ.400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல், பட்டன் ரோஸ் கிலோ ரூ.200–க்கும், அரளி பூ கிலோ ரூ.100–க்கும், சாமந்தி பூ கிலோ ரூ.80–க்கும் விற்கப்படுகிறது. கடந்த வாரம் கிலோ ரூ.500–க்கு விற்ற கனகாம்பரம் பூ இந்த வாரம் ரூ.800–க்கும், ஜாதிமல்லி கிலோ ரூ.400–க்கும், பெங்களூர் ரோஸ் ஒரு கட்டு ரூ.70–க்கும், சம்பங்கி கிலோ ரூ.30–க்கும் கலர் பூ கிலோ ரூ.40–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

உயர வாய்ப்பு

இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறும் போது, 'தற்போது பனிகாலம் என்பதால் மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைந்து உள்ளது. இதனால் பூக்களின் விலையில் உயர்ந்து காணப்படுகிறது. இன்னும் பொங்கலுக்கு 2 நாட்களே இருப்பதால் பூக்கள் விலை உயர வாய்ப்புள்ளது' என்று கூறினார்.

**நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 6500 மூட்டை பருத்தி ரூ.1¼ கோடிக்கு ஏலம்**



நாமக்கல்: நாமக்கல் வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு, துணை தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலை யில் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம், பவித்தி ரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட் டங்களில் இருந்தும் விவசாயி கள் ஏறத்தாழ 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்ப னைக்கு கொண்டு வந்திருந் தனர்.

<u>ரூ.1¼ கோடிக்கு விற்பனை</u>

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 600 முதல் ரூ.5 ஆயிரத்து 589 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 706 முதல் ரூ.7 ஆயிரத்து 610 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங் கணாபுரம், சேலம், விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். கடந்த வாரம் இந்த சங்கத்துக்கு 5 ஆயிரம் மூட்டை பருத்தி ஏலத் துக்கு வந்தன. இந்த வாரம் கூடுதலாக ஆயிரத்து 500 பருத்தி மூட்டைகள் வந்துள் ளது குறிப்பிடதக்கது.

100 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகியது



நல்லம்பள்ளி,

நார்த்தம்பட்டி ஏரி தூர்வாரப்படாததால் 100-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிடப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீரின்றி வாடியது. இதனால் இந்த ஏரியில் உள்ள முட்புதர்களை அகற்றி, தூர்வார வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நார்த்தம்பட்டி ஏரி

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளியை அடுத்த கோவிலூர் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் நார்த்தம்பட்டி செல்லும் சாலையின் வடக்குபுறத்தில் ஏரி உள்ளது. இந்த ஏரியை சுற்றிலும் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்களாக இந்த ஏரி தண்ணீரின்றி வறண்டு காணப்பட்டது. இதனால் இந்த பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பாலைவனம் போல் வறண்டு காணப்பட்டது. இந்தநிலையில் கடந்த 4 மாதங்களுக்கு முன் பெய்த மழையின் காரணமாக நார்த்தம்பட்டி ஏரிக்கு தண்ணீர் வந்தது. இதன் காரணமாக ஏரி பாசனத்தை மட்டும் நம்பி இருந்த விவசாயிகள் தங்களது உழவு பணிகளை மேற்கொண்டு நெற்பயிர்களை நடவு செய்தனர். ஏரிக்கு போதிய தண்ணீர் வந்ததால் 100-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரபப்ல் நெற்பயிர்கள் பயிர்களும் நல்லமுறையில் வளர்ந்து வந்தது.

## பதிராக மாறிய நெற்கதிர்கள்

இந்தநிலையில் மழை பொய்த்து போனதால் நார்த்தப்பட்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து முற்றிலும் நின்று விட்டது. ஏரியில் இருக்கும் தண்ணீரை வயல்களுக்கு விவசாயிகள் பாய்ச்சி வந்தனர். தற்போது ஏரியில் தண்ணீர் இன்றி வறண்டு விட்டதால் ஏரியை நம்பி பயிரிட்ட நெற்பயிர்கள் காய்ந்து மணி பிடிக்காமல் பதிராக மாறியுள்ளது. இதனால் கோவிலூர் விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்தனர். கிடைத்த வரை லாபம் என்று கருதிய விவசாயிகள் காய்ந்து போன நெற்பயிர்களை அறுவடை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, நார்த்தம்பட்டி ஏரி தூர்வாரப்படாததால் சாலையோரம் உள்ள பள்ளத்தில் மட்டும் தண்ணீர் நிறைந்திருந்தது. இதை நம்பி கோவிலூர் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் நெற்பயிர்களை தீவிரமாக நட்டு வந்தோம். தற்போது ஏரி தண்ணீர் இன்றி வறண்டு விட்டது. நெற்பயிர்கள் அறுவடை செய்யப்படும் நிலையில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கதிர் இல்லாமல் பதிராக போய்விட்டது. ஏரியில் தண்ணீர் வறண்டு விட்டதால் நடவு செய்த நெற்பயிர்களை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த அறுவடை செய்து வருகிறோம்.

## விவசாயிகள் கோரிக்கை

இந்த ஏரியில் உள்ள தண்ணீரை நம்பி பல ஆயிரம் ரூபாய் செலவிட்டு நெற்பயிர்கள் நட்டும் தற்போது அறுவடையில் போதிய நெல் கிடைக்கவில்லை. இதனால் எங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு போதிய மழை பெய்தும் ஏரி தூர்வாரப்படாததால் மழைநீர் வீணாகி இப்பகுதி விவசாயிகளுக்கு பயனில்லாமல் போனது. மாவட்ட நிர்வாகம் இந்த ஏரியில் உள்ள முட்புதர்களை அகற்றி, தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சோகத்துடன் தெரிவித்தனர்.

எனவே விவசாயிகளின் நலன் கருதி ஏரியை தூர்வாரி, முட்புதர்களை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?.

**பொங்கல் பண்டிகையையொட்டி கோவைக்கு கரும்பு வரத்து அதிகரிப்பு 20 கரும்பு விலை ரூ.300**



கோவை,

பொங்கல் பண்டிகையையொட்டி கோவையில் கரும்பு வரத்து அதிகரித்துள்ளது. 20 கரும்பு உள்ள ஒரு கட்டு ரூ. 300–க்கு விற்கப்படுகிறது.

<u>கரும்பு வரத்து அதிகரிப்பு</u>

பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்காக மக்களால் வாங்கப்படும் முக்கிய பொருளாக கரும்பு உள்ளது.இந்த ஆண்டு கரும்பு வரத்து கடந்த ஆண்டை அதிகரித்துள்ளது. கோவைக்கு திருச்சி, தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலிருந்து லாரிகளில் கரும்பு லோடுகளை விவசாயிகள் ஏற்றி கோவை உக்கடம் கொண்டு வந்து அவர்களே விற்றுவிட்டு தங்கள் ஊர் திரும்புகின்றனர்.கோவையில் இந்த ஆண்டு கரும்பு விற்பனை குறைந்துள்ளதால் விலையும் குறைந்துள்ளதாக வியாபாரிகள் கூறினார்கள். 20 கரும்பு உள்ள ஒரு

கட்டு மொத்த விலை ரூ.250 முதல் ரூ. 300 வரை விற்கப்படுகிறது. ஒரு கரும்பு ரூ. 25 முதல் ரூ. 30 வரை விற்கப்படுகிறது.

<u>சூடு பிடிக்குமா?</u> இதுகுறித்து கரும்பு விற்கும் விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

கோவைக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கரும்பு வரத்து அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் சுமார் 50 லோடு கரும்பு வந்துள்ளது. இன்னும் கரும்பு வரும் என்று எதிர்பார்க்கிறோம். கடந்த 2 நாட்களாக கரும்பு விற்பனை மந்தமாக இருந்தாலும் இன்று முதல் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாங்கள் கோவைக்கு கரும்பு கொண்டு வந்து மொத்த விலைக்கு விற்கிறோம். அதை இங்குள்ளவர்கள் வாங்கி சென்று சில்லறை விலைக்கு விற்கிறார்கள்.கரும்பு விற்பனை இன்றும், நாளையும் தான் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை**



குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

<u>தேயிலை ஏலம்</u>

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 2-க்கான ஏலம் கடந்த 9, 10-ந்தேதி களில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 42 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 12 லட்சத்து 79 ஆயிரம் கிலோ இலை ரக மாகவும், 5 லட்சத்து 63 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

## 88 சதவீத தேயிலை விற்பனை

இந்த ஏலத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. விற்பனையான அனைத்து தேயிலை தூளுக்கும் ரூ.2.50 விலை ஏற்றம் ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் அதிகபட்ச விலையாக 205 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் அதிக பட்ச விலையாக 252 ரூபாய்க்கு ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 55 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 65 ரூபாயில் இருந்து 68 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 190 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. விற்பனை எண் 3-க்கான ஏலம் வருகிற 16, 17ஆகிய நாட்களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 73 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**பொங்கல் பண்டிகை களை கட்டியது ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.1200 ஒரு ஜோடி**



திருப்பூர்,

பொங்கல் பண்டிகையை யொட்டி ஒரு ஜோடி கரும்பு ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட் டது. மல்லிகை பூ ரூ.1200 ஆகவும் உயர்ந்தது.

**காப்பு கட்டுதல்**

தமிழர் திருநாளாம் பொங் கல் பண்டிகை நாடு முழுவதும் நாளை(செவ்வாய்க்கிழமை) சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இதற்காக திருப்பூர் மக்கள் தயாராகி வருகிறார்கள். பொங்கலுக்கு முதல் நாளான இன்று(திங்கட்கிழமை) காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடை பெறுகிறது. பொங்கலை வரவேற்கும் வகையில் அனை வரும் தங்கள் வீடுகளை சுத்தம் செய்து, வாசல்களில் கோல மிட்டு, வேப்பிலை, பூழை பூ, ஆவாரம் பூ ஆகியவற்றை வீட்டு முற்றத்தில் செருகி வைப்பார்கள்.

இதற்காக மார்க்கெட்டில் ஏராளமான அளவு வேப்பிலை, பூழை பூ, ஆவாரம் பூ விற்பனைக்காக நேற்று முதல் குவித்து வைக்கப்பட்டு உள்ளன. முத்தூர் மற்றும் நத்தக்காடையூர் ஆகிய பகுதிகளில் இருந்து பூழை பூ, பல்லடம் சுற்றுப்பகுதிகளில் இருந்து ஆவாரம் பூ ஆகியவை கொண்டு வரப்பட்டு ஒரு கட்டு ரூ.5 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்பட்டது.

## ஒரு ஜோடி கரும்பு ரூ.80

பொங்கல் பண்டிகையில் முக்கிய பங்கு வகிக்கும் கரும்பு மதுரை சுற்றுவட்டார பகுதி களில் இருந்து விற்பனைக்கு வந்துள்ளது. நல்ல தரமான கரும்பு ஒரு ஜோடி(இரண்டு) ரூ.80-க்கும், சற்று தரமான கரும்பு ரூ.60 மற்றும் ரூ.50-க் கும் விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பு உற்பத்தி அதிகரித்து உள்ளதால் விலை சற்று குறைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல் மஞ்சள் கொத்து கோபி பகுதியில் இருந்து விற்பனைக்கு குலை, குலையாக வந்து இறங்கி உள்ளது. மஞ்சள் கொத்து ஒன்று சிறியது ரூ.2 முதல் ரூ.3 வரை விற்பனையானது. கடந்த ஆண்டு ஒரு மஞ்சள் கொத்து ரூ.5-க்கு விற்றது. இந்த ஆண்டு மஞ்சள் கொத்து வரத்து அதிகரித்துள்ளதாக தெரிவித்தனர். வழக்கம் போல் பொங்கல் வைப்பதற்கு பயன் படும் மண் பானைகள் அதிக மாக மார்க்கெட்டுக்கு வந்துள் ளன. ரூ.50 முதல் ரூ.100 வரை பல அளவுகளில் பொங்கல் பானைகள் விற்பனையா னது.

## பூக்கள் விலை உயர்வு

பொங்கல் பண்டிகையை யொட்டி பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. நிலக்கோட்டை, அவினாசி, திண்டுக்கல் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து பூ விற் பனைக்கு வருகிறது. தற்போது பனி காலமாக இருப்பதால் பூக்களின் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இத னால் வரத்து குறைந்து இருந் தது.

இந்தநிலையில் பொங்கல் பண்டிகையையொட்டி பூக் களின் தேவை அதிகரித்துள்ள தால் விலை நேற்று கடுமையாக உயர்ந்து விட்டது. திருப்பூர் பூ மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ மல்லிகை பூ ரூ. ஆயி ரத்து 200-க்கும், முல்லைப் பூ ரூ. ஆயிரத்து 100-க்கும், செவ்வந்தி பூ ரூ.160-க்கும், அரளி பூ ரூ.120-க்கும், சம்பங்கி ரூ.120-க்கும், பட்டு பூ ரூ.60-க்கும், பெங்களூரு மல்லி என்றழைக்கப்படும் காக்கடா மல்லிகை பூ ரூ.ஆயிரத்துக்கும், ரோஜா பூ கிலோ ரூ.240-க்கும் விற்பனை

செய்யப்பட்டது. அனைத்து பூக்களின் விலையும் உயர்ந்து இருந்தாலும் விற் பனை நன்றாக இருந்தது.

<u>மக்கள் கூட்டம்</u>

அதுபோல பூஜைக்கு தேவை யான வாழைப்பழம் ஒன்று ரூ.5-க்கும், தேங்காய் ரூ.15-க் கும், வெற்றிலை ஒன்று ரூ.1-க்கும், எலுமிச்சம் பழம் ரூ.3-க்கும் விற்பனையானது. நேற்று கடை வீதிகளில் மக்கள் கூட்டம் குறைவாக இருந்தா லும் இன்று(திங்கட்கிழமை) அதிக அளவில் இருக்கும் என்று வியாபாரிகள் எதிர்ப் பார்ப்பில் உள்ளனர்.

**ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் 1 கிலோ முருங்கைக்காய் ரூ.200-க்கு விற்பனை**



கண்டமனூர், -

ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் முருங்கைக்காய் விளைச்சல் குறைந்துள்ள நிலையில் 1 கிலோ ரூ.200 ஆக விலை உயர்ந்து உள்ளது. வெங்காயம் விலை சரிந்து உள்ளது.

<u>முருங்கைக்காய் சாகுபடி</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டாரத்திற்கு உட்பட்ட டி.சுப்புலாபுரம், திம்மரசநாயக்கனூர், சேடப்பட்டி, சில்க்குவார்பட்டி, கொண்டம நாயக்கன்பட்டி,

கணவாய் பகுதிகளிலும், கடமலை-மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆத்தங்கரைப்பட்டி, கண்டமனூர், துரைச்சாமிபுரம், டாணாத்தோட்டம், அய்யனார்புரம், கொம்புக்காரன்புலியூர், பாலூத்து, சிதம்பரவிலக்கு, சிறப்பாறை, குமணன்தொழு ஆகிய பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் முருங்கைக் காய்கள் பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் முருங் கைக்காய்கள் மும்பை, டெல்லி போன்ற வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

மொத்த வியாபாரிகள் விளையும் இடத்திற்கே வந்து முருங்கைக்காய்களை கொள் முதல் செய்து லாரிகளில் ஏற்றிச்செல்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறை மற்றும் கடும் பனிப்பொழிவு கராணமாக சாகுபடி பாதிக்கப்பட்டது. இதனால் சந்தைக்கு முருங்கைக்காய் வரத்து குறைந்தது. வரத்து குறைந்த காரணத்தால் தற்போது 1 கிலோ முருங்கைக்காய் ரூ.180 முதல் ரூ.200 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் முருங்கை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>வெங்காயம் விலை சரிவு</u>

ஆண்டிப்பட்டி சுற்று வட்டார பகுதிகளில் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது விளைச்சல் அடைந்த சின்னவெங்காயம் அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த மாதம் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.35 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டது. வரத்து அதிகரிப்பு காரணமாக விலை படிப்படியாக குறைந்தது. இங்கு அறுவடை செய்யப்படும் வெங்காயம் அதிக அளவில் மதுரை சந்தைக்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது கர்நாடக மாநிலம் மைசூர் பகுதிகளில் இருந்து மதுரை சந்தைக்கு வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் வெங்காயம் விலை குறைந்து உள்ளது. ஆண்டிப் பட்டி பகுதிகளில் அறுவடை செய்யப்படும் வெங்காயம் 1 கிலோ ரூ.15 முதல் ரூ.17 வரை விற்பனை செய்யப்படுகிறது. வெங்காயம் விலை குறைந்து உள்ளதால் விவசாயிகள் கவலைஅடைந்து உள்ளனர்.

**ஆண்டிப்பட்டி மார்க்கெட் நிலவரம் வரத்து குறைவால்பூக்கள் விலை உயர்வு**



ஆண்டிப்பட்டி,

ஆண்டிப்பட்டி சுற்று வட்டார பகுதிகளில் நிலவும் கடும் பனிப் பொழிவால் பூக்கள் விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டிப் பட்டி பூ மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்து குறைந்து விலை உயர்ந்துள்ளது.

பூ விளைச்சல்

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே உள்ள கதிர் நரசிங்கபுரம், கன்னியப்பப் பிள்ளை பட்டி, பாலக் கோம்பை, தெப்பம்பட்டி, திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், ஏத்தகோவில், சுந்தரராஜபுரம் ஆகிய பகுதி களில் மல்லிகை, செவ்வந்தி உள்ளிட்ட பூக்கள் சாகுபடி அதிகளவில் நடைபெறுகிறது. இங்கு விளையும் பூக்கள் ஆண்டிப்பட்டி பூ மார்க் கெட்டிற்கு கொண்டு வரப் பட்டு விற்பனை செய்யப் படுகிறது.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யாத நிலையில் அனைத்து விவசாய பணி களுக்கும் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டிப்பட்டி பகுதிகளில் பூக்கள் சாகுபடி பாதிக்கப்பட்டது. மழையின்றி பூக்கள் விளைச்சல் குறைந்த நிலையில், கடந்த சில வாரங் களாக காணப்படும் கடும் பனிப்பொழிவால் பூக்கள் விளைச்சல் மேலும் கடுமை யாக பாதிக்கப்பட்டுள்ளது.

விலை உயர்வு

இதனால் ஆண்டிப்பட்டி பூ மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்து குறைந்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால் பூக்களின் விலை அதிகரித்து காணப்படுகிறது. ஆண்டிப் பட்டி சந்தையில் நேற்றைய நிலவரப்படி ஒருகிலோ மல்லிகைப்பூ அதிகபட்சமாக ரூ.600 வரை விற்பனை செய் யப்பட்டது. இதேபோன்று ஒரு கிலோ பிச்சிப்பூ ரூ.600, சம்மங்கிப்பூ ரூ.80, ரோஜாப்பூ ரூ.60, அரளிப்பூ ரூ.40, துளசி ரூ.30, செவ்வந்திப்பூ ரூ.50, செண்டுப்பூ ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்டது.

தண்ணீர் பற்றாக்குறை, கடும் பனிப்பொழிவு ஆகிய காரணங்களால் இனிவரும் நாட்களில் பூக்கள் வரத்து மேலும் குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையே தை மாதத்தில் முகூர்த்த தினங்கள் தொடங் கும் என்பதால் பூக்களின் விலை மேலும் உயரும் நிலை உள்ளதாகவும் பூக்கள் வியா பாரிகள் கூறுகின்றனர். அதே நேரத்தில் பூக்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விலை அதிகமாக கிடைத்தும் விளைச்சல் இல்லையே என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**சின்னமனூரில் செங்கரும்பு அறுவடை பணி தீவிரம் ஒரு கட்டு ரூ.120–க்கு விற்பனை**



சின்னமனூர்,

சின்னமனூரில் செங் கரும்பு அறுவடை பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது. ஒரு கட்டு கரும்பு ரூ.120–க்கு மொத்த விற்பனையாளர்களால் கொள்முதல் செய்யப்படு கிறது.

கரும்பு அறுவடை

தேனி மாவட்டத்தில் பொங் கல் பண்டிகையை தித்திக்க செய்யும் செங்கரும்பு சாகுபடி சின்னமனூர், தேவதானப் பட்டி பகுதியில் அதிகளவில் நடைபெறுகிறது. இந்நிலையில் சின்னமனூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட செங் கரும்புகள் அறுவடை பணி தற்போது தொடங்கி உள்ளது. இந்த கரும்புகளை கொள்முதல் செய்ய, தேனி மாவட்டம் தவிர்த்து வெளிமாவட்ட வியாபாரிகளும் அதிகளவில் வருகின்றனர். குறிப்பாக நெல்லை, நாகர்கோவில், ராஜபாளையம் மற்றும் அருகில் உள்ள கேரள மாநிலத்தில் இருந்தும் கரும்பு களை வாங்க சின்னமனூர் பகுதியில் வியாபாரிகள் தற் போது முகாமிட்டு உள்ளனர். இவர்கள் கரும்புகளை மொத்த விலைக்கு பேசி கொள்முதல் செய்வதால், 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.120 என்ற விலைக்கு தான் கொள்முதல் செய்யப்படுகிறது. அதே நேரத்தில் தேனி மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள சந்தைகளில் பொங்கல் பண்டி கையை முன்னிட்டு ஒரு கட்டு கரும்பு குறைந்தபட்சம் ரூ.200 என்ற அளவில் சில்லறை விற்பனை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சின்னமனூர் வட்டாரத்தில் உள்ள பெரும் பாலான கரும்பு தோட்ட ங்களில் அறுவடை முடிந்து கரும்புகள் லாரிகள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு விற் பனைக்காக கொண்டு செல் லும் பணி தீவிரமாக நடை பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

விவசாயிகள் எதிர்பார்ப்பு

இது குறித்து கரும்பு விவசாயிகள் கூறும் போது, ‘சின்னமனூர் வட்டாரத்தில் பொங்கல் கரும்பு அறுவடை தற்போது நடைபெற்று வரு கிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கரும்பு விலை குறைவாக தான் உள்ளது. அதே நேரத்தில் கூலித்தொழிலாளர்கள் சம்பளம் உயர்ந்துள்ளதால் கரும்பு கட்டுகளை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் தான் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும்’ என்று தெரிவித்தனர்.

**கரும்பு விற்பனை சூடுபிடித்தது வாழைத்தார் விலை உயர்வு**



தூத்துக்குடி, -

தூத்துக்குடியில் கரும்பு விற்பனை சூடுபிடித்தது. வாழைத்தார் விலை உயர்ந்து உள்ளது.

<u>பொங்கல் பண்டிகை</u>

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகை நாளில் மக்கள் கரும்பு, மஞ்சள் படைத்து பொங்கலிட்டு வழிபடுவது வழக்கம். இதனால் தூத்துக்குடி மாவட்டத்துக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து கரும்பு உள்ளிட்ட பொருட்கள் விற்பனைக்காக வந்து குவிந்த வண்ணம் உள்ளன. இதனால் தூத்துக்குடியில் மார்க்கெட் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகள் மக்கள் கூட்டத்தால் களை கட்ட தொடங்கி உள்ளது.

<u>கரும்பு</u>

தூத்துக்குடிக்கு தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் இருந்து லாரிகளில் கரும்புகள் கொண்டு வரப்பட்டு விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன. இதில் 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.250 வரை விற்பனை

செய்யப்படுகிறது. ஒரு தனிக்கரும்பு ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் படி கொடுப்பதற்காக மக்கள் கரும்பு கட்டுகளை அதிக அளவில் நேற்று வாங்கி சென்றனர்.

கரும்பு வரத்து அதிகரித்தால் இதன் விலையில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், எதிர்பார்த்த அளவுக்கு பொதுமக்கள் கரும்பை வாங்க வரவில்லை என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>கோவில்பட்டி</u>

கோவில்பட்டி மெயின் ரோடு, புது ரோடு, எட்டயபுரம் ரோடு, மாதாங்கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு கட்டுகள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன. அவற்றை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து வியாபாரி தமிழரசன் கூறுகையில், கடந்த ஆண்டு 15 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.250 முதல் ரூ.300 வரை விற்பனையானது. பின்னர் நிறைய கரும்புகள் விற்பனையாகாமல் தேங்கியதால் விலை குறைந்து வீணானது. இந்த ஆண்டு மதுரை மேலூர் தனியாமங்கலம் பகுதியில் இருந்து 100 லாரிகளில் கரும்பு கட்டுகள் கோவில்பட்டிக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் குறைவு. 15 எண்ணிக்கை கொண்ட முதல் தரமான ஒரு கட்டு கரும்பு ரூ.280-க்கும், நடுத்தரமான கரும்பு கட்டு ரூ.250-க்கும் விற்பனை செய்யப்படுகிறது, என்று கூறினார்.

<u>ஏரல்</u>

ஏரல் மார்க்கெட்டில் 15 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.325 முதல் ரூ.350 வரை விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் குலை ரூ.30 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

வாழைத்தார்

கோவில்பட்டி மார்க்கெட்டுக்கு நெல்லை, தூத்துக்குடியில் இருந்து வாழைத்தார் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. பொங்கலை முன்னிட்டு வாழைத்தாரின் விலை உயர்ந்து உள்ளது.

இதுகுறித்து வியாபாரி பெரியசாமி கூறுகையில், கடந்த வாரம் ரூ.300-க்கு விற்ற 80 பழங்களைக் கொண்ட நாட்டு வாழைத்தார் ரூ.300 விலை உயர்ந்து ரூ.600-க்கு விற்கிறது. ரூ.150-க்கு விற்ற சக்கை வாழைத்தார் ரூ.150 விலை உயர்ந்து ரூ.300-க்கு விற்கிறது. ரூ.130-க்கு விற்ற கதளி வாழைத்தார் ரூ.70 விலை உயர்ந்து ரூ.200-க்கு விற்கிறது. ரூ.300-க்கு விற்ற கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200 விலை உயர்ந்து ரூ.500-க்கு விற்கிறது. ரூ.250-க்கு விற்ற கோழிக்கூடு, லோபஸ்டா வாழைத்தார் ரூ.150 விலை உயர்ந்து ரூ.400-க்கு விற்கிறது. ரூ.600-க்கு விற்ற செவ்வாழைத்தார் ரூ.200 விலை உயர்ந்து ரூ.800-க்கு விற்கிறது, என்று கூறினார்.

**வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: தென் கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்**




சென்னை,

வங்க கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தென் கடலோர மாவட்டங்களில் இன்று(திங்கட்கிழமை) மாலை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்து உள்ளது.

வறண்ட காலநிலை

சில தினங்களுக்கு முன் வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வந்தது. தற்போது தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் வறண்ட வானிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில், 2 தினங்களுக்கு முன் அந்தமான் தீவு அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலையானது, தற்போது தென்கிழக்கு வங்கக்கடலும், தென்மேற்கு வங்கக்கடலும் சந்திக்கும் இடத்தில் நிலை கொண்டு உள்ளது.

இன்று மாலை மழை பெய்யும்

இதனால் தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் இன்று(திங்கட்கிழமை) மாலை மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். பொதுவாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரை விவசாயிகளுக்கு சாதகமான வானிலையே காணப்படுகிறது. மேற்கண்ட தகவலை சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**தேயிலை உற்பத்தி குறைந்தது**



புதுடெல்லி

இந்தியாவின் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் 1.03 சதவீதம் குறைந்து 11.24 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, 2012 நவம்பர் மாதத்தில் 11.36 கோடி கிலோவாக இருந்தது.

அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தேயிலை உற்பத்தி குறைந்ததே சரிவுக்கு காரணம் என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. அம்மாதத்தில் அசாமின் தேயிலை உற்பத்தி 7 சதவீதம் குறைந்து 5.51 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. முந்தைய ஆண்டு நவம்பர் மாதத்தில் இது, 5.90 கோடி கிலோவாக இருந்தது.

மேற்கு வங்காள மாநிலத்தின் உற்பத்தி 8 சதவீதம் குறைந்து 3.05 கோடி கிலோவிலிருந்து 2.81 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. நவம்பர் மாத மொத்த தேயிலை உற்பத்தியில் இந்த இரண்டு மாநிலங்களின் பங்களிப்பு 76 சதவீதமாக உள்ளது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 21 சதவீதம் அதிகரித்து 2.70 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது 2012–ஆம் ஆண்டின் இதே மாதத்தில் 2.23 கோடி கிலோவாக இருந்தது.

சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் நம்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேசமயம் நுகர்வில் முதலிடத்தில் உள்ளது. நம்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் காபியை விட தேநீர் பருகுவதே இதற்கு காரணமாகும்.

2012–13–ஆம் நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி 3.62 சதவீதம் அதிகரித்து 113.50 கோடி கிலோவாக இருந்தது. நடப்பு ஆண்டில் பருவமழை நன்றாக இருந்ததால் தேயிலை உற்பத்தி சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகரிக்கும் என நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## இதுவரை இல்லாத அளவிற்கு கோதுமை சாகுபடி பரப்பளவு 3.11 கோடி ஹெக்டேராக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) இதுவரை கோதுமை சாகுபடி பரப்பளவு 7 சதவீதம் அதிகரித்து இதுவரை இல்லாத அளவிற்கு 3.11 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. எனவே, உணவு தானியங்கள் உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் முந்தைய சாதனை அளவை விஞ்சும் என மத்திய விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ரபி பருவத்தின் இதே காலத்தில் கோதுமை சாகுபடி பரப்பளவு 2.91 கோடி ஹெக்டேராக இருந்தது.

<u>உணவு தானியங்கள்</u>

2011–12 பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 25.93 கோடி டன்னாக உயர்ந்திருந்தது. சென்ற பருவத்தில் (2012–13) இது 25.33 கோடி டன்னாக குறைந்தது.

நடப்பு ரபி பருவத்தில் இதுவரை கோதுமை சாகுபடி பரப்பளவு மத்தியபிரதேசத்தில் அதிகபட்சமாக 14.22 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது. ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசத்தில் கோதுமை பயிரிடும் பரப்பளவு முறையே 4.88 லட்சம் மற்றும் 4.73 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.

ரபி வேளாண் பணிகள் அக்டோபர் மாதத்தில் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடைகிறது. இப்பருவத்தில் கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பிரதானமாக பயிரிடப்படுகின்றன. நடப்பு பருவத்தில் இதுவரை ரபி பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பளவு 6.19 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் 5.87 கோடி ஹெக்டேராக இருந்தது.

அக்டோபர் மாதம் முதல் இதுவரை பருப்புகள் பயிரிடும் பரப்பளவு 1.47 கோடி ஹெக்டேரிலிருந்து 1.55 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 82.70 லட்சம் ஹெக்டேரிலிருந்து 86.20 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

நெல் சாகுபடி பரப்பளவு 5.50 லட்சம் ஹெக்டேரிலிருந்து 7.20 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. அதேசமயம், சிறு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு 60 லட்சம் ஹெக்டேரிலிருந்து 58.50 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.

உற்பத்தி இலக்கு

நடப்பு ரபி பருவத்தில் 9.25 கோடி டன் கோதுமை, 1.20 கோடி டன் பருப்பு, 1.40 கோடி டன் அரிசி, 44 லட்சம் டன் மக்காச்சோளம் மற்றும் 15 லட்சம் டன் பார்லி உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இலைக்குள் வாழும் பச்சோந்தி



ஊர்ந்து நகரும் தன்மை கொண்டவை ஊர்வன. ஆமை, பல்லி, பாம்பு, முதலை மற்றும் பிடரிக்கோடன் ஆகியவை ஊர்வனவாகும். ஊர்வனவற்றில் பெரும்பாலானவை நிலத்தில் வாழ்பவை. சில ஊர்வன உயிர்கள் நீரிலேயே அதிக நேரம் காணப்படும். ஊர்வன எல்லா பருவநிலைகளிலும் வாழும் இயல்புடையவை. அதிக பனியும், குளிரும் காணப்படும் துருவப் பகுதிகளில் மட்டும் ஊர்வன உயிர்கள் இருப்பதில்லை.

**எவை ஊர்வன?**

#முதுகெலும்பிகள்

#குளிர் ரத்தப் பிராணிகள். இவற்றால் தங்கள் உடல் வெப்பநிலையைச் சூழ்நிலைக்கு ஏற்ப முறைப்படுத்திக்கொள்ள இயலாது. உற்சாகமாகவும் ஊக்கத்துடன் இருக்க அவற்றுக்குச் சூரியஒளி அவசியம். வெப்பநிலை அதிகமானால் அவை நிழல் அல்லது பொந்துகளுக்குள் போய் மறைந்துகொள்ளும்.

#உடல் செதில்களால் போர்த்தப்பட்டிருக்கும்

#நுரையீரல்கள் உள்ளவை

#முட்டையிட்டுக் குஞ்சு பொறிப்பவை

**கடல் ஆமை**

ஊர்வன உயிர்களில் அளவில் பெரிய உயிரி கடல் ஆமை. இந்தப் பூமியில் தோன்றிய தொன்மையான உயிரினங்களில் இதுவும் ஒன்று. இதன் ஓடு நீரில் நீந்துவதற்குத் தகுந்தாற்போல வடிவமைக்கப்பட்டது. பச்சை, மஞ்சள், கருப்பு, பழுப்பு நிறங்களில் காணப்படும். இவை அசைவ உணவுப் பழக்கம் கொண்டவை. ஜெல்லி மீன்கள் முதல் நத்தைகள் வரை சாப்பிடும். முட்டையிடுவதற்காகவும், கூடு அமைப்பதற்காகவும், உணவுக்காகவும் ஆயிரக்கணக்கான மைல்கள் கடலில் பயணம் செய்யும் வல்லமை கொண்டவை.

**ப்ரூகெசியா மைக்ரா**

தீக்குச்சியின் மருந்து முனை அளவே உள்ள பச்சோந்திகள் சமீபத்தில் மடகாஸ்கர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. இவைதான் உலகிலேயே சிறிய ஊர்வன என்று கருதப்படுகிறது. இதற்கு ப்ரூகெசியா மைக்ரா என்று பெயர். குட்டி வாலும் சற்று பெரிய தலையும் கொண்டது. ஒரு இலை மடிப்பில் பகல் முழுவதும் இருக்கக் கூடியது. இரவு, மரத்தில் சிறிது தூரம் ஏறித் தூங்கும் தன்மை கொண்டது.